Regd No M. 4900. 16 பக்கங்கள்.

# குடி அரசு

ESTD. 1924

உள்நாடு வருட சந்தா ரூ. 7-0-0. தனிப்பிரதி 0-2-0.
வெளிநாடு ,, ரூ. 9-0-0. ,, 0-2-6.

மாலை 22 } ஈரோடு 11-12-1948 சனிக்கிழமை } மலர் 14.

## கொடி வணக்கம்!

(ஏற்ற இசையில் பாடுக)

எடுப்பு

வணங்கிடுவோம்! வணங்கிடுவோம்!
வளநிறை திராவிட மறுமலர்ச்சிக் கொடியை (வ)

மேலெடுப்பு.

குணங்குடி கொண்ட நம் தந்தையாம் "பெரியார்"
கூரறிவிலமைந்த சீர்பெறும் கொடியினை (வ)

அமைதி.

கீழ் நிலையைக் குறிக்குஞ் சூழ் "கருநிறமே"
கிளர்ச்சியாம் புரட்சியை விளக்கும் "செந்நிறமே"!
வாழ்கதென் மொழிக்கொள்கை வெல்க நம்நாடு.
வீழ்க தீயாரியம் "விடுதலை" பெறவே (வ)

"மாறநாடன்"

☆

## இந்தி எதற்கு?

(தேவிதனைப் பிரிந்தோம்—என்ற மெட்டு. தா. ஆதி.
இராகம் சிந்துபைரவி)

எடுப்பு

இந்தி மொழி யெதற்கோ! அந்தோ! நமக்கே (இ)

மேலெடுப்பு

சிந்தைக் கினியதல்ல செந்தமிழ்கல்லாமல்
வந்தேறி யாரியர்க்கும் வடவர்க்கும் நன்மைசெய்யும் (இ)

அமைதி

தந்தைதாய் தமர்கொன்றே தம்பகையொடுசென்றே
தன்னல மிழப்பவர்போல்
சிந்தனை சிறிதில்லாச் சிறியவர் ஒருசிலர்
செய்யும் அறியாமையும்
அய்யோ தமிழ் கொல்லுமே (இ)

ஆர். நாகலக்ஷுமி.

★

# இதோ! வகுப்புவாதிகள் தூக்கிலிடுங்கள்!

✻

நம்மை வகுப்புவாதிகள் என்று சில நயவஞ்சகக்காரர்கள் கூறி வருகின்றனர். நியாயத்தின் அடிப்படையில் எழும் நமது ஒவ்வொரு கோரிக்கையையும் வகுப்புவாதம் என்று கூறி ஒழித்துவிட எத்தனிக்கின்றனர் சில வக்கிர புத்திபடைத்தவர்கள். சுயநலத்திலும், சுயஜாதி முன்னேற்றத்திலும் கண்ணும் கருத்துமாக உள்ள சில சோற்றுப்பிண்டங்கள்தேசீயத்தின் திரைமறைவில் இருந்து கொண்டு தங்கள் ஜாதி முன்னேற்றத்திற்குப் பாடுபட்டும், வளர்த்தும் வருகின்றனர். இந்தப் பத்தாம் பசலிகள் தங்களின் சதி வேலைகளை அம்பலப்படுத்தும் நம்மை வகுப்புவாதிகள் என்று கூறி ஒழித்துவிட முயற்சிக்கிறார்கள். இந்தப் பன்னாடைகளின் இழிசெயல்களை எவ்வளவுதான் பன்னிப்பன்னிக் கூறினாலும் சிலருக்கு உண்மை புலப்படுவதில்லை. இந்த அளவுக்கு அவர்களின் பிரச்சார பலம் இருக்கிறது. நம்மை இன்னமும் சரியாகப்புரிந்துகொள்ளாமல்வகுப்புவாதிகள் தானோ என்று சந்தேகக் கண்ணோடு நோக்குபவர்களுக்கும், நம்மை வகுப்புவாதிகள்தான் என்றுகூறுகின்ற கோணல்புத்தி படைத்த குக்கல்களுக்கும் இதைச் சமர்ப்பிக்கிறேன்.

* *

வகுப்புவாரி பிரதிநிதித்துவத்தை நாம் வலியுறுத்தும்பொழுதுதான் நம் மீது வகுப்புவாதிகள் என்ற குற்றம் சாட்டப்படுகிறது. அதாவது பள்ளிகளிலும், கல்லூரிகளிலும் மாணவர்கள் சேர்க்கப்படும்பொழுதும் மக்களின்எண்ணிக்கை விகிதாச்சாரப்படி தரப்பட வேண்டும் என்று கூறுகிறோம். இதைத்தான், இந்நாட்டில் தேசியத் திரைமறைவிலிருக்கும் தெகிடுதத்தக்காரர்கள் வகுப்புவாதம் என்று கூறுகின்றார்கள். ஆனால் உண்மையான வகுப்புவாதிகள் யார்? எங்கிருக்கின்றார்கள்? என்பதை நடுநிலை நின்று இந்தப் பிரச்னையை ஆராய்ந்துகூறும் மாற்றுக்கட்சிப் பத்திரிகையின் அபிப்பிராயத்தையும் கூறுகிறேன்.

* *

"உத்தியோகங்களிலும், பள்ளிக்கூடங்களிலும் எந்த ஒரு வகுப்பாருக்கும் ஏகபோகம் இருக்கக்கூடாது என்ற ஒரே கருத்தில்தான் இந்த வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் வந்தது. இதை அமுலுக்குக் கொண்டு வந்தவர்கள் ஜஸ்டிஸ் கட்சி. மந்திரி சபையினர். இந்த முறை கடந்த பல வருடங்களாக அமுலில் இருந்து வருகிறது. இந்த முறைக்குப் பச்சையாக அர்த்தம் சொல்ல வேண்டுமென்றால், பார்ப்பனர்கள் ஏகபோகமாக அனுபவித்து வந்ததைத் தடுப்பதுதான் அர்த்தம். சகல துறைகளிலும் பார்ப்பனர்கள் ஏகபோகமாக அனுபவித்து வந்தார்கள். உத்தியோகங்களிலும் சரி, பள்ளிக்கூடங்களிலும் சரி, பிராமணர்களே அதிகப்படியாக இருந்தார்கள். அதிகப்படி என்றால் 100க்கு 60 என்றோ 70 என்றோ அல்ல. 100க்கு 95 வீதம் இருந்துவந்தார்கள் என்பது மறுக்கமுடியாத உண்மை. இவ்வாறு ஒரு வகுப்பார் ஆதிக்கம் வகித்துவருவது இதர வகுப்பாருக்கு சகல விதத்திலும் இடைஞ்சலாக இருந்தது. இடைஞ்சல் என்பதற்குப் பதிலாக பாதகம் என்று சொன்னால்கூட தகும். அவ்வளவு தூரம் நிலைமை மோசமாக இருந்தது........... இந்த அநியாயத்தை ஜஸ்டிஸ்கட்சிக்காரர்கள் எடுத்துச்சொல்லி பிரசாரம் செய்தார்கள். இந்த அநியாயத்தைப் போக்க வேண்டும் என்ற நோக்கத்தில்தான் ஜஸ்டிஸ் கட்சியே தோன்றியது"

இது வகுப்புவாரி பிரதிநிதித்துவத்திற்கு விளக்கம். ஜஸ்டிஸ்கட்சி தோன்றாமுன் இருந்த நிலைமை, தோன்றிய காரணம். இது மாற்றுக் கட்சியினரின் அபிப்பிராய மட்டுமல்ல, இதுதான் முற்றிலும் உண்மையும் கூட.

* *

"வகுப்புவாதத்தை ஒழிக்க முயலுகிறவர்களை நோக்கி வகுப்புவாதி என்று கூறி அனாவசியமாக மானத்தை இழக்காமல் இருப்பார்களாக. பொதுமக்களுக்கு வகுப்புவாதிகள் யார் என்பதை எடுத்துக்காட்ட வேண்டிய நிலைமை இப்போது இல்லை. அந்தக் காலம் மலையேறிவிட்டது என்பதை உணர்ந்து ஒழுங்காக நடப்பார்களாக" இது நம்மை வகுப்புவாதிகள் என்று கூறும் உண்மை வகுப்புவாதிகளுக்கு அறிவுரை கலந்த எச்சரிக்கை!

* *

"சில பார்ப்பனர்கள் ஜாதிய உயர்வைக் கைவிட முடியாது என்று கூறுகிறார்கள். இதைப் பச்சையாகக் கூறாமல் திறமை என்றும் யோக்கியதாம்சம் என்றும் கூறுகிறார்கள். திறமை என்பதோ யோக்கியதாம்சம் என்பதோ எந்தக் குறிப்பிட்ட வகுப்பாருக்கும் பட்டயம் போட்டு, பாட்டன் வழி வழி வரும் உரிமையாக எந்தக்காலத்திலும் எந்த லோகத்திலும் (புராணங்களில் கூறப்படும் ஈரேழு பதினான்கு லோகங்களையும் மனதில் வைத்துக் கொண்டுதான் "லோகம்" என்ற பதத்தை உபயோகித்திருப்பார் என்று கருதுகிறேன்) இருந்ததே கிடையாது. தனக்குத்தான் திறமை உண்டென்று பார்ப்பனர் பேசுவது அகம்பாவமான பேச்சு" இது ஆணவம் மிக்க ஆரியத்தின் 'அநீதி நிறைந்த போக்கிற்கு ஆணித்தரமான கண்டனம்.

* *

வகுப்புவாரி பிரதிநிதித்துவ முறையை ஒழித்துவிட வேண்டும் என்று ஆரிய அம்மாமிகள் கூட்டும் மாநாடுகளிலும் தீர்மானிக்கிறார்கள். சட்டசபையில் சூரிய. நாராயண ராவ், பீமராவ் போன்ற சர்வ தேசியம் பேசும் பரந்த நோக்கம் கொண்டவர்களும் கரடியாகக் கத்துகிறார்கள். இன்று இவர்கள் மட்டுமல்ல, இந்த முறை அமுலுக்குக் கொண்டுவரப்பட்டதிலிருந்து இன்றுவரை இந்த எத்தர்களின் கூக்குரல் இருந்துகொண்டுதான் இருக்கிறது. ஆனாலும் இந்த முறையை ஒழிக்க முடியவில்லை—இனி முடியவும் முடியாது. ஏன் ஒழிக்கமுடியாது? என்று கேட்பவர்களுக்கு நான் பதில் கூறுவதைவிட நமக்கு மாற்றுக்கொள்கை உடையவர் கூறும் பதிலையே தருகிறேன்.

"வகுப்புவாரி பிரதிநிதித்துவ முறை ஒழியாததற்கு ஒரே ஒரு காரணம். அம்முறையின் நியாய அடிப்படைதான்" இது நமது அன்றையச் செயலுக்கு இன்று கிடைத்திருக்கும் பாராட்டு. இதைப் போலவே இன்றைய நமது போக்கைக் கண்டிப்பவர்கள் நாளை நம்மை ஆதரிப்பதுடன் போற்றவும் செய்வார்கள் என்பது உறுதி!

* *

"தங்களின் அப்பட்டமான வகுப்புவாதத்தை மறைப்பதற்காக இந்த வீரர்கள் சர்வ தேசியமென்றும், பரந்த நோக்கமென்றும் பேசுகிறார்கள். சர்வ தேசியம் என்பதும், பரந்த நோக்கம் என்பதும், திரைமறைவில் தன் இனத்தாருக்குஉழைப்பதுஎன்றஅர்த்தத்தில் இல்லை. தன் ஜாதியான்தான் முன்னேற வேண்டும்—தன் பந்துமித்திரர்தான் உயர்ந்த பதவிகளை வகிக்க வேண்டும் என்று நினைப்பது மகா மட்டரகமான வகுப்புவாதம். இந்த வடிகட்டின வகுப்பு வாதத்திற்கு சர்வ தேசியம் என்று பெயர் கொடுத்தால் நாக்கு அழுகிவிடும். (இதுவரை யாருடைய நாக்கும் அழுகாததினால்தான் அந்த வேலையைத் தொடர்ந்து செய்து வருகிறார்கள் என்று "சின்னப்பயல்" சொல்கிறான்) இந்த மாபாதக வேலையைத்தான் சட்டசபைக்குள்ளும் வெளியேயும், மேடைகளிலும், பத்திரிகைகளிலும் இவர்கள் செய்து வருகிறார்கள்" என்று கார

(தொடர்ச்சி 15ம் பக்கம் பார்க்க)

ரோஜா முத்தையா




காட்சி 8.

[மில்லாபீஸ்]

உறுப்பினர்:— விஸ்வன், இராஜன், பியூன், இரஞ்சன், இராகவன்.

கதை அமைப்பு:— [விஸ்வனிடம் வந்து உத்தியோகம் பெற்றிருக்கும் இராஜனைச் சதி செய்வதற்கு விஸ்வன் தன் நண்பர்களுடன் தீர்மானிக்கிறான்]

இராஜன்:— [பியூனிடம் ஒரு விசிட்டிங் கார்டைக் கொடுத்து] இந்தாப்பா! இதை மானேஜிங் டைரக்டரிடம் கொண்டு போய் கொடு.

பியூன்:— ஊம். சரித்தான்சார்! இங்கேயே நில்லுங்க!

[என்று கூறிவிட்டு விசிட்டிங் கார்டைக் கொண்டு போய் விஸ்வனிடம் கொடுக்கிறான்]

விஸ்வன்:- [அந்தக் கார்டை வாங்கிப் பார்த்துவிட்டு] உம். வரச்சொல்.

பியூன்:- [இராஜனிடம் வந்து] உம். வரச்சொல்லுறாங்க!

இராஜன்:- [விஸ்வனிடம் சென்று] வணக்கம்!

[என்று கூறி, முதலியார் கொடுத்த கடிதத்தைக் கொடுக்கிறான்]

விஸ்வன்:- கடிதத்தைப் பார்த்ததும்]

டேக் யுவர் ஸீட்! ஊம்...! முதலியாருக்கு உம்மை எப்படித் தெரியும்?

இராஜன்:- அவர் மகள் விமலாவும் நானும் ஒரே வகுப்பில் படித்தவர்களாதலால் என்னைப்பற்றித் தெரிய அவருக்குச் சந்தர்ப்பம் கிடைத்தது!

விஸ்வன்:- நீர் இங்கே உத்தியோகம் பெறுவதற்காக, விமலாவின் நட்பையும், முதலியாரின் தயவையும் கோரி இருந்திருக்கிறீர்...?

இராஜன்:- இல்லை! கடந்த நான்கு வருடங்களாகவே நானும், விமலாவும் ஒருவருக்கொருவர் அன்னியோன்னியமான நட்புடையவர்களாவோம்!

விஸ்வன்:- அதன் பலன் தான் இதுவென்று சொல்கிறேன்! சரி. நீர் இன்று முதல் முதலியார் குறிப்பிட்டுள்ளபடியே, இங்கு 'ஹெட் கிளார்க்' பதவியை ஏற்றுத் திறம்பட நடத்தி வரலாம்!

இராஜன்:- வணக்கம்! [என்று கூறிவிட்டு உள்ளே செல்கிறான்]

விஸ்வன்:- [ஆழ்ந்த கவலையில் மூழ்குகிறான்]

இரஞ்சன்:- [இராகவனோடு உள்ளே வந்து, விஸ்வன் நிலை கண்டு சற்று தயங்கிப் பிறகு] என்னப்பா விஸ்வம்!

விஸ்வன்:- [திடுக்கிட்டுத் திரும்பி] ஆ! ஓ...! நீங்கள் தானா...? உம்! சரி; உட்காருங்கள்...!

இரஞ்சன்:- விஸ்வா! ஏனிந்தக் கலக்கம்? என்ன நேர்ந்ததுனக்கு?

விஸ்வன்:- ச்சு! ஒன்றுமில்லை...

இராகவன்:- ஒன்றுமில்லையா? உன் முகம் அப்படிச் சொல்லவில்லையே...?

இரஞ்சன்:- ஆம். நீ ஏதோ! ஆழ்ந்த கவலையில் மூழ்கியிருக்கிறாய் என்றுதான் தோன்றுகிறது!!

இராகவன்:- விஸ்வா! அப்படித் தலைபோகிற காரியம் என்னப்பா வந்துவிட்டது? உம்! எதுவாயிருந்தாலும் சரி; எங்களிடம் ஒரு வார்த்தை சொன்னால் போதும்! உனக்காக எங்கள் உயிரையே கொடுக்கவும் தயார்!!

விஸ்வன்:- என்னப்பா அது! உயிரைக் கொடுக்கிறோம், உடலைக் கெடுக்கிறோம்னு ஏதேதோ பேசுகிறீர்களே! இன்றைக்கு ஏதாவது புதுத் திட்டம் போட்டுக் கொண்டு வந்திருக்கிறீர்களா...?

இரஞ்சன்:- என்ன விஸ்வா! நண்பர்களுக்குள் ஒருவனுக்கு ஒரு ஆபத்துன்னு வந்துவிட்டால்! எங்கள் உயிர் என்ன வெல்லமா?

விஸ்வன்:- அடடே...! இப்போது எனக்கொன்றும் ஆபத்து வந்துவிடவில்லையப்பா...!!

இரஞ்சன்: வேறே என்னதான் வந்துவிட்டதென்று அப்படியே ஸ்தம்பித்துப் போயிருந்தாய்?

விஸ்வன்:- ஓ! அதுவா...? 'போட்டி'!

இராகவன்:- போட்டியா...?

விஸ்வன்:- ஆம்! என் வாழ்க்கையில் போட்டி போட ஒரு பயல் தோன்றி இருக்கிறான்!! அதுவும் இன்றவன் என் ஆபீஸுக்குள்ளேயே குடிபுகுந்து விட்டான்...!!!

இரஞ்சன்:- ஓகோ! அந்தப் பயல் ராஜனைத்தானே சொல்கிறாய்...?

விஸ்வன்:- ஆமாம். அவனே தான்! கடந்த நான்கு வருடங்களாக கல்லூரியில் விமலாவுடன் பழகி, அவளுடைய கள்ளங்கபடமற்ற உள்ளத்தைக் கவர்ந்த கசடன்!!

இராகவன்:- விஸ்வா! உனக்கு அந்தப் பயலைப்பற்றிய கவலையே வேண்டாம்ப்பா!! நாங்கள் அவனை ஒரு வழியா ஒழித்து விடுகிறோம்!!!

இரஞ்சன்:- ஆமாம்ப்பா! பயலைப் பள்ளிக்கூடத்துக்கனுப்பிக் கம்பி எண்ணச் செய்துவிடலாம்ப்பா...!

விஸ்வன்:- என்ன...! ராஜனைச் சிறைக்கனுப்புவதா? எப்படி?

இரஞ்சன்:- இது என்னப்பா பிரமாதம்! இப்போது என் கையில் இரண்டு லெட்சம் ரூபாய்க்கு ஒரு பிளாக் மார்க்கட் பேரமிருக்கிறது! நீ மட்டும் துணிந்து நூல் பேல்களைத் தள்ளி விட்டாயானால் போதும்! லாபத்தை நாம் பங்கு போட்டுக்கொள்ளலாம்!! பேல்களைத் திருடி விட்டான்

(தொடர்ச்சி 14ம் பக்கம்)

கதை கற்பனை.

சிறுகதை

இரண்டாம் பருவம்

# சந்நியாசி.

போட்டி
எண் 13.

அன்று, ஊரே அல்லோல கல்லோலப்பட்டது! யாரைப் பார்த்தாலும் இதே பேச்சுத்தான்! எந்த மூலையிலே பார்த்தாலும் சுவரொட்டிகள்! ஒவ்வொருவர் கையிலேயும் துண்டுப்பிரசுரங்கள்! தெருவெல்லாம் தோரணங்கள்! வாசலிலெல்லாம் தண்ணீர் தெளிக்கப்பட்டு, கோலங்கள் போடப்பட்டிருந்தன! மக்களெல்லோரும் புத்தாடை அணிந்து புன்முறுவலுடன் விளங்கினர், அனைவர் முகத்திலும் ஆனந்தம், எல்லோருக்கும் இன்பம்! காரணம், அன்று அவ்வூரிலுள்ள கோவிலுக்கு ஒரு பிரபல சந்நியாசி வருகிறாரென்றுதான்.

காலை ஒன்பது மணிக்கு வருகிறாரென்று விளம்பரம் செய்யப்பட்டிருந்ததென்றாலும் ஆறு மணியிலிருந்தே மக்கள்கூட ஆரம்பித்து விட்டனர். அந்தக் கோயிலிலே கூடியிருந்த மக்கட் கூட்டத்தைப் பார்த்தால் ஏதோ ஒரு பெரிய திருவிழா நடப்பது போன்றிருந்தது. "அவர் சந்நியாசி மட்டுமல்ல, ஒரு பிரசித்திபெற்ற ஜோசியருங்கூட" என்று மக்கள் பேசிக்கொண்டனர். அவருக்குப் பாதகாணிக்கை செய்யப் பலரும், வணங்கி வரப்பிரசாதம்பெற அநேகரும், மந்திரத்தால் அவர் சொல்லும் மாய சக்தியைப்பார்க்க மற்றவரும் வந்திருந்தனர். "அவர் யோகியப்பா, சென்றவிடமெல்லாம் அவருக்கு அமோக வரவேற்பு! திருட்டுப்போன பொருட்கள் இருக்குமிடத்தை அப்படியே படம் பிடித்துக் காட்டுவது போல சொல்லுகிறாராம்! அவரைத் தரிசிக்க லட்சோப லட்சம் மக்கள் கூடுகின்றனராம்!" என்று கோயிலைச் சுற்றி மக்கள் கும்பல் கும்பலாக நின்று பேசிக்கொண்டிருந்தனர். அந்த சந்நியாசி அவ்வூருக்கு வரும் அன்று, அவருக்காக மாலையில் இசைவாணிகளின் கச்சேரிகளும், நாட்டியராணிகளின் நடனங்களும் நடைபெற அமோகமான ஏற்பாடுகள் வேறு செய்யப்பட்டிருந்தன.

"அட்வகேட் அண்ணாசாமி அய்யர் வீட்டிலிருந்து, நாதஸ்வர வித்வான் நாகையா இசை முழங்க, தவுல் வித்வான் தக்ஷிணாமூர்த்தி தாளம் போட, பூக்களால் அலங்கரிக்கப்பட்ட பல்லக்கில் சந்நியாசி—ஞானோதய சாமியார் ஊர்வலம் வருவார்கள். எல்லோரும் தரிசிக்கவும்" என்று துண்டுப் பிரசுரத்தில் குறிப்பிட்டிருந்தபடி அண்ணாசாமி அய்யர் வீட்டிலிருந்து பல்லக்குப் புறப்படத் தயாராக இருந்தது. ஆயிரக்கணக்கான மக்கள் கூடியிருந்தனர். மெய்யன்பர்கள் மெய்ஞ்ஞானிகள், விபூதியணிந்தோர் முதலியவர்கள்தான் அந்தக்கூட்டத்தில் ஏராளமாக இருந்தனர். "பல்லக்குப் புறப்படப்போகிறது எல்லோரும் அமைதியாக இருங்கள்" என்று ஒரு சிறுவன் குழாய் மூலம் அறிவித்தான். அதன்படியே அனைவரும் அமைதியாக இருந்தனர்.

பாண்டு வாத்தியங்கள் முழங்க, நாதஸ்வர வித்வான் இன்னிசை இசைக்க, அன்பர்கள் பலர் "ஞானோதய சாமியார் வாழ்க" என்ற ஒலி பரப்ப, சந்நியாசி, யோகி, ஆத்மஞானி, கடவுள் பக்தன் என்று பலர் புகழ் பாட, பூசுரர் பலர் சந்நியாசியின பொன்னான உடலைப் புட்பப பல்லக்கில் தூக்கிவைக்க, சந்நியாசியின் கருந்தாடி காற்றிலே அசைந்தாட, பல்லக்கு கிளம்பிற்று. பல்லக்கைச் சுற்றிப் பார்ப்பனப் புரோகிதர்கள் பலர் நின்று பரம சந்நியாசியின் புகழைப் பாட, மற்றும் சிலர் "ஞானோதய நம" எனறு வேதமொலித்துக் கொண்டே சென்றனா. அநேகத் தெருக்கள் வழியாக பல்லக்குச்சுற்றி வந்தது. வழிநெடுக சந்நியாசியார்க்குப் பன்னீர் அபிஷேகமும், ஏராளமான பொருட்கள் தானமும் செய்யப்பட்டன. "பெண்களுக்கு விபூதி கொடுக்கும்போது மெதுவாக அந்தப்பெண்களின் கையைத் தொட்டுப்பார்க்கிறாரு டோய்" என்று இரு சிறுவர்கள் பேசிக்கொண்டே போயினர். அது உண்மையோ என்னமோ தெரியவில்லை. பெரிய பணக்காரர்களின் வீட்டில் அவருக்குப் பொற் கிழிகளும், வெள்ளிப் பாத்திரங்களும் பரிசாக அளிக்கப்பட்டன. ஏராளமான பெண்கள் அவர்மேல் பூமாரி பொழிந்து "புண்ணியவதி" என்றபட்டம்பெற்றனர். அதிகமான பொருட்கள் திருட்டுப்போன வீட்டின் சொந்தக்காரர்கள் தங்கள் வீட்டின் முன் நிறுத்தி எவ்வளவோ உபசாரங்கள் செய்தார்கள். "சுவாமி! திருட்டு விஷயமாய்........" என்று சந்நியாசியிடம் பணக்காரர்கள் கேட்டதற்குக்கூட அவர் கோவிலுக்கு வரும்படி உத்திரவிட்டு விட்டார். பொருட்களைப் பறிகொடுத்த அனைவரும் கோவிலுக்குச் சென்று காத்திருந்தார்கள். இந்த விநோதச் செயல்களைக்கண்டு எல்லோரும் வியந்தனர். சந்நியாசிக்கு இருக்கும் அமோகமான ஆதரவைப் பார்த்து எல்லோரும் ஆச்சரியப்பட்டனர். வழியிலெல்லாம் உபசாரம் உயர்ந்ததாகவும், வரவேற்பு வகையுடனும் செய்யப்பட்டு, அந்த ஞானோதய சந்நியாசியின் கோலாகலப் பவனி தெருவெல்லாம் சுற்றி வந்துகொண்டிருந்தது.

கோவிலிலே நிற்பதற்குக்கூட இடமில்லை. எள் போட்டால் எள் விழுந்து விடாது என்பது மட்டுமல்ல, அந்த எள் எண்ணெயாகவே போய்விடும் என்பதும் நிச்சயம். அவ்வளவு கூட்டம் கூடியிருந்தது. எல்லோரும் எதிர்பார்த்திருந்தபடி பல்லக்கு வரும் ஆரவாரம் கேட்டது. எல்லோரும் சந்தோஷத்துடன் நின்றுகொண்டிருந்தனர். சற்று நேரத்திற்குள் பல்லக்கு கோயிலுக்குள் வந்துவிட்டது. சந்நியாசியார் இறங்கிக் கூட்டத்தைப் பார்த்து ஒரு கும்பிடு போட்டுவிட்டு, அவருக்காகப் பிரத்தியேகமாக, மின்சார விளக்குகளால் அலங்கரிக்கப்பட்டிருந்த மேடையில் அமர்ந்தார். அமரும்போது ஒரு பெரும் கரகோஷம் கூட்டத்தினின்றும் கிளம்பி விண்ணைப் பிளந்தது. திடீரென அவ்வூரிலுள்ள ஒரு பெரும் பிரமுகர் மேடைமீதேறி "கனவான்களே! ஒவ்வொரு ஊரிலும் சுற்றுப் பிரயாணம் செய்து, அங்குள்ள மக்களைச் சந்தோஷப்படுத்திய ஞானோதய சாமியார், இன்று நமதூருக்கு விஜயம் செய்திருக்கிறார். அவர் சொற்பொழிவு முடிந்த பிறகு நீங்கள் உங்கள் சந்தேகங்களைக் கேட்டு நிவர்த்திசெய்து கொள்ளலாம்" என்று கூறி விட்டு கீழிறங்கி விட்டார். பிறகு ஞானோதயசாமியார் ஒரு சிறு சொற்பொழிவு செய்துவிட்டு, எல்லோருக்கும் ஜோஸ்யம் சொல்லிக்கொண்டிருந்தார்.

ஒருவர் "என் வீட்டிலிருந்த வெள்ளிக்கூஜா ஒன்றும் சில பித்தளை

(தொடர்ச்சி 13-ம் பக்கம்)

## தோழர்களே!

இந்தக் கதையோடு 13-கதைகளும் வெளிவந்து விட்டன!

தீர்ப்பளிக்கும் விபரத்திற்கு 16-ம் பக்கம் வேண்டுகோளைப் படியுங்கள்!

# சாதிகள் ஒழியட்டும்!

மற்றெந்த நாட்டிலுமில்லாத இந்த சாதிப்பிரிவினை, நமது திராவிடநாட்டின் பொதுவான நல்லொற்றுமையைக் கெடுக்கிற—மக்களை மடமையிலாழ்த்துகிற பெரிய சத்துருவாக—வேசாளமாக இருந்து வருகிறது. திராவிடமக்களுடைய ஒற்றுமையைக் கெடுத்துப், பகையையும் பிரிவினையையும் உண்டாக்கி, மக்கள் ஒருவருக்கொருவர் உதவிசெய்து கொள்ள முடியாதபடி தடுத்துப், பார்ப்பனர்களுக்குப் பிழைப்பையுண்டாக்கி விட்டது . சாதிப் பிரிவினை.

பிரம்மாவின் வாயிலிருந்தும் முகத்திலிருந்தும் பார்ப்பனர்களும், புயத்திலிருந்து க்ஷத்திரியர்களும், தொடையிலிருந்து வைசியரும், பாதத்திலிருந்து சூத்திரரும் (திராவிடரும்) உண்டானார்களென்று ஒரு புராணமும், சதபாத பிராமணத்தில், பூ—பூவா—சுவா என்கிற சொல்லிலிருந்து அந்நான்கு சாதியினரும் உண்டானார்களென்றும், தாயித்திரிய பிராமணத்தின் ஓரிடத்தில் தேவர்களிடமிருந்து பார்ப்பனர்களும், அசுரரிலிருந்து சூத்திரரும் தோன்றினார்களென்றும், மற்றொரு இடத்தில் 4 வேதங்களிலிருந்து 4 சாதிகளும் தோன்றிற்றென்றும், மற்றொரு நூலில் வைவஸ்தனிடத்திலிருந்து எல்லாமக்களும் தோன்றினார்களென்றும், பிறிதொருநூலில் வைவஸ்தன் மகனான மனுவினிடத்திலிருந்து தோன்றினார்களென்றும், பாகவத புராணத்தில் சத்தியயுகத்தில் ஒரே சாதிதான் இருந்ததென்றும், வாயு புராணத்தில் திரேதாயுகத்திற்கு முன்பு ஒரே சாதியிருந்ததென்றும், பின்பு பலவாறாகப் பிரிக்கப்பட்டதென்றும், ஒவ்வொரு நூலும் ஒவ்வொரு முறையிலே வித்தியாசமாகக் கூறுவதை நோக்கும் பொழுது, இவைகளை எழுதிவைத்த பார்ப்பனர்கள் சரியான 'பித்தலாட்டக்காரர்கள்' என்று வெட்டவெளிச்சமாகத் தெரிகிறது.

இவையனைத்தும் பொய்யென்று கூறினால், அப்பொழுது சாதியும் பொய்யென்று ஒப்புக்கொண்டேயாக வேண்டும்.

மேலும் திரிமூர்த்திகளின் உடலில் எந்தப்பாகம் மகிமை யுடையதென்றும், எந்தப்பாகம் மகிமையற்றதென்றும் தீர்மானித்து, அவைகளுக்குத் தக்கதாக மக்களுக்குள் உயர்வு, தாழ்வு கற்பித்து சாதிப் பிரிவினையை உண்டாக்கி விட்டனர், ஆரியர்!

இந்தப் பிரகிருதிகள் கூறுகிற பிரகாரம் பார்த்தால், ஒரே மனிதனிடம் தோன்றின பிள்ளைகளெல்லோரும் ஒரே சாதியென்று எந்த மூடனும் தடங்கலின்றி ஒப்புக்கொள்வானே. அப்படியிருக்க ஒரே மனிதனிடம் தோன்றின பிள்ளைகள் எவ்வாறு வெவ்வேறு சாதியினர் ஆவார்கள் என்பதைச் சிந்தித்துப்பாருங்கள்.

சாதிப்பிரிவினை ஆரம்பம்:—

மத்திய ஆசியாவிலே பிழைக்க வழியில்லாமல் பிச்சையெடுக்கும் கும்பலைப்போல, சொந்த நாட்டைவிட்டு, சுற்றித் திரியும் சோம்பேறிக் கூட்டமாகிய நாடோடிகளைப் போல ஆடு மாடுகளை ஓட்டிக்கொண்டு இங்கு வந்து 'ஆரியாவர்த்தம்' தோற்றுவித்து, அதில்குடியேறிய ஆரியக்கூட்டத்தால் இந்தச் சாதிப்பிரிவினையுண்டாயிற்று.

சாதியென்ற சொல்லுக்கு, கோத்திரம் அல்லது குலமென்றும், வருணமென்னும் சொல்லுக்கு நிறமென்றும் பொருளாகும். குளிர்ச்சியான நாடுகளிலிருந்து வந்த ஆரியர் சிவப்பு நிறமாயும், இங்கு வசித்த பழங்குடி மக்களான திராவிடர் இந்த நாட்டின் தட்பவெப்ப நிலைக்கு ஏற்றவாறு கருப்பு நிறமாயும் இருந்தபடியால், ஆரியர் திராவிடரை "கருஞ்சருமர்" என்று அழைத்தனர்.

வீணை வாசிப்போரை வேணர் என்றும், பாணர் என்றும்; பறை ஒச்சுகிறவர்களை ஒச்சர் என்றும் (ஒச்சுதல்—கொட்டுதல்) இலை வாணிபம் செய்வோரை இலை வாணியர் என்றும்; சுண்ணாம்பு செய்து விற்பவர்களை சுண்ணாம்புக்காரரென்றும் அழைத்து வந்தனர் ஆரியர். இவ்வாறே தொழில் பற்றி சாதிப்பேருண்டாயிற்று. ஆகவே முதலில் தொழில்பற்றி சாதிப் பெயருண்டாயிற்றே தவிர, சாதிப்பற்றித் தொழில் உண்டாகவில்லை.

ஒன்றே குலமும், ஒருவனே தேவனும் என்ற திராவிடன் பண்பாட்டிற்கு இந்தச் சாதிப்பிரிவினையே தடைக்கல்லாக இருந்து வருகிறது.

புராண இதிகாசங்களில் காணுகிறபடி, பிரம்மாவிடமிருந்து தோன்றின நான்கு சாதிகளும் இந்த நாட்டு மக்களை மட்டும் குறிப்பிடுகிறதே தவிர, இந்தியா நீங்கலாக உலகிலுள்ள எத்தனையோ நாட்டினரையும் மொழியினரையும் ஏன் குறிப்பிடவில்லை? அந்த அயல் நாட்டினர் அனைவரும் இந்தப் பிரம்மனால் உண்டாக்கப்பட்டார்களோ அல்லது அந்தந்த நாட்டிற்குரிய வெவ்வேறு கடவுளிலிருந்து உண்டாககப்பட்டார்களோ? ஆங்கிலேய, ருஷிய, பிரான்சிய, துருக்கிய, சீன, அமெரிக்க நாட்டினர்களிருக்கிறார்களே; இவர்களனைவரும் தாங்கள் வாழுகிற நாட்டின் தட்பவெப்ப நிலைக்கு ஏற்றவாறு தங்கள் நிறத்திலும், நாகரீகத்திலும், நடை உடை பாவனைகளிலும் வேறுபட்டிருக்கிறதைப்பார்க்கிறோமே தவிர உருவத்தில் வேறுபட்டிருப்பதைப் பார்க்கிறோமா? பல கடவுள்களிருந்தால் அவரவர் தமக்கு விருப்பமானபடி தாங்கள் சிருஷ்டிக்கிற மனித உருவங்களையும் வித்தியாசப் படுத்தியிருக்கலாமே! உங்களது பகுத்தறிவுக்குச் சற்று வேலை கொடுத்து சிந்தித்துப்பாருங்கள். ஏன்? ஏன்? என்ற கேள்வியம்புகளைச் சரமாரியாகத் தொடுத்த வண்ணமிருங்கள்! கிடைக்கும் பதிலைக் கேடயமாகக் கொண்டு, அடக்கியாளும் ஆணவச் செயலை அழித்தொழிக்க, சாதிப் பிரிவினையை ஒழித்துக்கட்ட முன்

# இந்தி எதிர்ப்பு மறியல்.

## 45-ம் நாள் போர்.

சென்னை டிச. 2.

தோழர்களான கலைச் செல்வன், திராவிடமணி, முனுசாமி, சாளைகபீர், அலமேலு அம்மையார் ஆகிய அய்ந்து தொண்டர்களும் இன்று காலை 9½ மணிக்குத் தலைவர் வீட்டிலிருந்து புறப்பட்டு வந்து 10-30 வரை மறியல் செய்தனர்.

மழையாயிருந்தும்கூட மக்கள் ஏராளமாக வந்து தொண்டர்களைத் தொடர்ந்து ஒலிமுழக்கம் செய்தனர்.

## 46-ம்நாள் போர்.

சென்னை டிச. 3.

நேற்றுப் போலவே இன்றும் 5 தொண்டர்களின் மறியல் 10-30 மணி வரை 1 மணி நேரம் நடந்தது.

தொண்டர்கள் புறப்படும்போது சிலர் வைதீகர்கள் வந்து தமிழ் வாழ்க! இந்தி ஒழிக! என்றதும், தொண்டர்கள் புறப்பட்டு வரும் போது வீடுகளிலுள்ள தாய்மார்கள் தமிழ் வாழ்க! இந்தி ஒழிக! என்று முழங்கியதும் குறிப்பிட வேண்டியவைகள்.

வடநாட்டில் தமிழ் இல்லாத போது தென்னாட்டில் மட்டும் இந்தி ஏன்? என்று குறிப்பிட்ட ஒரு துண்டு விளம்பரங்களைப் பெருவாரியாக மக்களுக்குக் கொடுத்தனர் மாணவர்கள்.

பெங்களூர் சோஷியலிஸ்ட் ஒருவர், தொண்டர்களுக்குப் பழவர்க்கம் வழங்கித் தன் பாராட்டுதலையும் தெரிவித்தார்.

வாருங்கள்!

தமிழ்ப்பெரியார் திருவள்ளுவ நாயனார் எழுதியுள்ள ஞானவெட்டியான், சாதிபேதக் கண்டனத் தருவில்,

"உங்களுக்கும் எங்களுக்கும்
பேதமாமே ஆண்டே
உள்ளுணர்ந்து பார்க்க ஒரு
எள்ளளவுமில்லை"
"பள்ளையாடு செம்மறியின்
குட்டியாமோ
நல்லப் பசுவைக்கிடா
மருவக்கிடாரியாமோ...இனி
துள்ளுஞ்சேவல் கொக்கைச்சேர
அண்டமாமோ செழும்
நாரை கோழியைச் சேர
குஞ்சதாமோ நல்ல
பள்ளப் பாகல்வித்ததுவும்
சுரையாமோ இந்தப்
பட்சியிலும் பேதாபேதம்
தோன்றுமாண்டே"

என்று கூறியிருக்கிறார்.

பஞ்சமா பாதகங்களையும் கூசாமல் செய்த திரிமூர்த்திகள் உண்டு பண்ணவில்லை சாதிப்பிரிவினையை. முற்காலத்திலிருந்த அறிவீனமுள்ள இந்து கிரந்த கர்த்தாக்களான ஆரியர்கள் வடக்கே இமயமலையும், தெற்கே கன்யா குமரியும் எல்லையாயுள்ள இந்நாடுதான் பூலோகம் என்று எண்ணி, அதற்குத் தக்கவாறு புராணங்களைக் கட்டி அதன்மூலம் சாதிப்பிரிவினையை உண்டுபண்ணிவிட்டார்கள். தங்களைப் போலுள்ள மனிதர் வாழுகிற அநேக நாடுகளுண்டென்று இவர்கள் அறியாதிருந்தனர்.

இந்தக் குள்ளநரிக்குணம் படைத்தோர் தங்களுடைய பிழைப்புக்காக ஏற்படுத்திக் கொண்ட மோசடிச்செயலே இந்தச்சாதிப்பிரிவினை. மகாபாரதம் சாந்திப் பருவத்தில் சாதிபேதமில்லை யென்றும், இந்த உலகத்தை ஆதியில் பிரம்மா சிருஷ்டிக்கும்போது எல்லா மக்களையும் பார்ப்பனர்களாகவே படைத்தாரென்றும், அப்பால் அவரவருடைய தொழில்களுக்குத் தக்கதாகச் சாதிப் பிரிவினை உண்டாயிற்றென்றும் பிருகுரிஷி சொல்லுகிறான். பார்ப்பனர் ஆதியில் கடவுளுக்குச் செலுத்தப்படும் பலிக்கடுத்த சடங்குகளில் மற்ற மக்களுக்கு உதவிசெய்து, நாளடைவில் குடும்பகுருக்கள் அல்லது புரோகிதர்களானார்களென்று புராணங்களின் மூலமறியலாம். அப்பால்போர் முறையில் தேர்ச்சியுற்றிருந்த க்ஷத்திரியரை சூழ்ச்சியால் வென்று மற்றச் சாதிகளிலும் மேலானவர்களென்று தங்களை உயர்த்திக் கொண்டார்கள்.

இவ்விடத்தில் நம் திராவிட இனம் சூத்திரராக்கப்பட்டு இழிவாக எழுதப்பட்டிருப்பதைக் கவனித்துப் பாருங்கள். நாங்கள் ஏன் பார்ப்பனீயத்தை வெறுக்கிறோம் என்பதைப் புரிந்து கொள்ளுவீர்கள். எந்த நாட்டிலும் இந்த மாதிரி மனிதனுக்கு மனிதன் அடிமையென்று இழிவு படுத்தப்பட்டிருந்ததை

# இந்தி எதிர்ப்பு மறியல்.

## 47-ம் நாள் போர்.

சென்னை டிச. 6.

முத்தியாலுப் பேட்டை பள்ளியின் முன்பு இன்றும் வழக்கம் போலவே அய்ந்து தொண்டர்களின் மறியல் ஒரு மணி நேரம் நடந்தது.

மறியல் நேரத்தில் ஒரு சார்ஜண்ட் செய்த கெடுபிடியால் ஏற்பட்ட பரபரப்புக்கு நம் தோழர்களால் அமைதியை உண்டாக்க வேண்டியதாயிற்று.

## 48-ம் நாள் போர்.

சென்னை டிச 7.

5 அறப்போர் தொண்டர்களின் மறியல் முத்தியாலுப்பேட்டைபள்ளியின் முன்பு இன்றும் 10-20 வரை அமைதியாக நடந்தது.

---

அந்நாட்டு வரலாறுகள் தெரிவிக்கின்றனவா என்பதையும் சிந்தித்துப் பாருங்கள்.

மனுவின் 8-ம் புத்தகம் 413-ம் சுலோகம்.

"ஒரு சூத்திரன் விலைக்கு வாங்கப்பட்டிருந்தாலும் அல்லது சுயேச்சையாயிருந்தாலும் அவன் பிராமணனுக்கு அடிமை வேலைசெய்யக் கட்டாயப்படுத்தப்படலாம். பிராமணனுக்கு அடிமைவேலைசெய்யவே சூத்திரன் சிருஷ்டிக்கப்பட்டான்."

சுலோகம் 417; "ஒரு சூத்திரனுடைய சொத்துக்களைப் பிராமணன் மனங்கூசாமல் எடுத்துக்கொள்ளலாம். ஏனெனில் சூத்திரனுக்கு யாதொன்றுஞ் சொந்தமில்லை."

புத்தகம் 10 சுலோகம் 125; "பிராமணன் உண்டு கழித்த எச்சிலையும், உடுத்திக்கழித்த கந்தையையும், கொழித்துத்தள்ளிய சேஷதானியத்தையும், ஒடிந்து முறிந்துபோன சாமான்களையுமே, சூத்திரன் வாங்கி அநுபவிக்கவேண்டியது."

புத்தகம் 8 சுலோகம் 270; "இருபிறப்பாளனாகிய (துவிஜனனை) பிராமணனை ஒரு பிறப்பாளனாகிய சூத்திரன் தோஷமான வார்த்தைகளினாலே எதிர்த்துப் பேசினால் அந்த சூத்திரன் இழிகுலத்தானாகையால் அவன் நாக்கை அறுத்தெறிந்து விடவேண்டும்."

சுலோகம் 281 "ஒரு கீழ்மகனாகிய சூத்திரன் உயர்மகனாகியபிராமணனுக்குச் சமமாயுட்கார எத்தனித்தால் அந்த சூத்திரனிடுப்பில் சூடுபோட்டு ஊரைவிட்டுத் துரத்திவிடலாம்"

புத்தகம் 4 சுலோகம் 80; "சூத்திரனுக்கு யாதொரு ஆலோசனையும் பிராமணன் சொல்லிக்கொடுக்கக் கூடாது. சாமிக்குப்படைக்கப்பட்ட ஆகாரத்தின் சேஷத்தையாவது, வெண்ணையையாவது, அவனுக்குக் கொடுக்கக்கூடாது. நாட்டுக்குரிய சட்டங்களையாவது, வைதீகக்கடமைகளையாவது அவனுக்குச் சொல்லிக் கொடுக்கக்கூடாது."

சுலோகம் 81; "ஒரு சூத்திரனுக்குத் துரைத்தனத்திற்குரிய சட்டத்தையாவது, வைதீகானுஷ்டத்தையாவது சொல்லிக்கொடுத்த பிராமணனும், செவிகொடுத்துக் கேட்டசூத்திரனும் அசம்விருத்த நரகத்தின் இருளிலே தள்ளப்படுவார்கள்" என்பதே.

எனவேதான், தாம்வாழப் பிறர் அறியாமையை அஸ்திவாரமாக்கி, பொருளாதார நிலையைச் சீர்குலைக்கும் புளியேப்பக்காரர்களாய் வாழும் பார்ப்பனீயம் ஒழியட்டும் என்று கூறுகிறோம். இந்தப் பார்ப்பனீயம் ஒழிக்கப்பட்டால் தான் சாதிப்பிரிவினை தொலைய வழி பிறக்கும். பார்ப்பனீயம் ஒழிக்கப்பட வேண்டுமானால் அறிவுணர்ச்சி பெறவேண்டும் மக்கள்.

ஆரியர்கள் எழுதிவைத்த மனுதர்ம சாஸ்திரம் சொல்லுகிற வேதோபதேசங்கள் உண்மையும் ஏற்றுக்கொள்வதற்கு தகுதியுமுடையனவா என்பதைப் பற்றிச் சிந்திப்போம்.

இந்து மதத்தில் ஆறு பிரிவுகள் உண்டென்று கூறுவார்கள். சாதிப்பிரிவினைக்கு ஆதாரம் இந்து வேதங்களில் இல்லையென்றே ஆங்கிலேய வடமொழிப் பண்டிதர் சொல்லுகிறார்கள். சாதிப் பிரிவினை இல்லாத காலத்திலேயே இந்துக்களுடைய முன்னைய பெரியோர்கள் இருந்தார்களென்று ஆதாரங்களால் தெரிய வருகிறது- கபிலர் முனி கூறுவதைக் கேளுங்கள்:— "பிரம்மா, ஊர்வசி யென்னும் இந்திரனுடைய சபையிலுள்ள நடனமாதோடு கூடி விபசாரஞ் செய்கையால் வசிஷ்டரைப் பெற்றானென்றும், அவனே முதல் முதல் வேதத்தைக்கொண்டு வந்து மக்களிடையேபோதித்துச் சாதிபேதமின்றி எல்லோரும் ஒற்றுமையுடன் கூடியிருக்கவும், ஒரே கடவுளை வணங்கவும், மாமிசம் புசிக்கவும் போதித்து, அருந்ததியென்ற சக்கிலியப் பெண்ணை மணந்து கொண்டு, சத்திபரைப் பெற்றானென்றும், அந்தச் சத்திபரும் அவ்விதமே தந்தையின் கொள்கைகளைப் போதித்து மற்றவர்களுக்கு முன்மாதிரியாகத் தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த ஒரு பெண்ணை மணந்து, பராசரைப் பெற்றானென்றும், பராசரும் தம் முன்னோர் கொள்கைகளைப் போதித்து மச்சகந்தி யென்கிற மீன் வாணிச்சியை விபசாரமாய்க் கூடி வேதவியாசரைப் பெற்றானென்றும், இந்த வேதவியாசர் தன் தந்தையின் உபதேசத்தையே சில நாள் போதித்துக் கடைசியாய் அந்த வேதத்தைப் பார்ப்பனர்களுக்குக் கொடுத்தானென்

(தொடர்ச்சி 12-ம் பக்கம்)

ரோஜா முத்தையா

## இந்தி எதிர்ப்பு மறியல்.

★

ஸ்ரீ எம். சுப்பிரமணியன் [illegible]-ம் நாள் போர்!

— சென்னை டிசு. 8.

இன்றும் முத்தியாலுப்பேட்டை பள்ளியின் முன்பு 5 அறப் போர்த் தொண்டர்களின் மறியல் 10-30 வரை 1-மணிநேரம் அமைதியாக நடந்தது.

---

# இத்துறையில் உழைப்பார்களா

★

நம் திராவிடநாட்டிலே பிச்சைக்காரர் என்று குறிப்பிடத் தக்கதோர் சமூகத்தார் ஏராளமாகப் பெருகியுள்ளனர், பெருகி வருகின்றனர். அவர்களும் நம் சென்னை அரசாங்கத்தாரிடம் தனித்தொகுதி முறைவேண்டி, அரசாங்கத்திற்கு தங்கள் சமூகத்தின் சார்பாகப் பிரதிநிதிகளையும், எம். எல். ஏக்களையும், மந்திரிகளையும் தேர்ந்தெடுத்து அனுப்பினால்கூட ஆச்சரியப்படுவதற்கில்லை. ஏனெனில் அவ்வளவு பெரிய கூட்டத்தினராகி விட்டனர், ஆங்கிலோ—இந்திய சமூகத்தாரைவிட. இவ்வாறு பலுகிப் பெருகிய பிச்சைக்காரர் சமூகத்தின் ஆதிவரலாற்றைச் சற்று ஆராய்வோம்.

முதன் முதலில் பிச்சை எடுப்பதையே தொழிலாகக் கொண்டோர் கூன், குருடு, செவிடு, நொண்டி, சப்பாணி, மூக்கரை, பெருவியாதிக்காரர் முதலிய அங்கக் குறையாளர்களும், நோயுற்றோர்களுமாவர். இத்தகையவர்கள், உழைக்கச் சக்தியற்றவர்கள், வசதியற்றவர்கள். ஆகவே இத்தகையவர்கள் பிச்சை எடுப்பதையே தொழிலாகக் கொண்டிருப்பது நியாயமானது, ஆதரிக்கக்கூடியது.

பின்னர் 'அய்யமிட்டுண்' என்றதோர் பழமொழி மக்கள் வழக்கில் வந்து புகுந்தது. அதன்படி செல்வர்கள் தம்மை அடுத்தார்க்குப் பிச்சையளித்த பின்னரே உணவு கொள்ளும் பழக்கம் ஏற்பட்டது. முற்காலத்தில் ஏன் ஏழைகளுங்கூட தமக்குள்ள எளிய உணவைத் தம்மிலும் கீழான நிலையிலுள்ளோர்க்கு அளித்த பின்னரேதாம் உண்டுவந்தனர். ஆகவே உழைக்காமல், அலுக்காமல் தமக்கு இலவசமாக உணவளிக்க ஒரு கூட்டத்தார் அன்னதானம், தருமம் என்றோர் கொள்கையினைக் கடைப்பிடிப்பதை அறிந்த ஒரு எத்தர் கூட்டம் உண்மையான பிச்சைக்காரர்களுடைய தொழிலில் பங்கு கொள்ளலாயினர். தருமம், அன்னதானம் இவைகளெல்லாம் பொதுவாக எல்லா மக்களுக்கும் செய்து வந்த ஓர் முறையால்தானே! இவ்வாறு பிச்சைக்காரர்களின்தொகை அதிகமாயிற்று.

சிறிது காலத்திற்குப்பின், ஆண்டவனின் அடியார்க்கு மக்கள் அமுது செய்விக்கும் முறை ஏற்பட்டது. இக்காலத்தில் 'ஏற்பது இகழ்ச்சி' என்று கருதப்படவே முற்கூறிய எத்தர்கூட்டத்தைச் சேர்ந்த சிலர் உழைக்காமல் பிழைத்தலில் இலகுவானதும் மதிப்பிற்குரியதுமான ஓர் முறையைக் கையாளத் தொடங்கினர். அம்முறைதான் காவியுடை, பட்டை நாமம், ஜெபமாலை, உத்திராக்கம், திருவோடு, திருநீறு முதலிய வேஷத்தை அணிந்து ஆண்டவனின் "திரு அடியார்"களானது. இவ்வேஷ மணிந்துள்ளோரை மக்கள் வலிய வந்து பயபக்தியுடன் கூப்பிட்டு, இன்னமுது செய்து வணங்கவே முற்கூறிய எத்தர் கூட்டம் இம்முறையினைக் கைக்கொண்டு உழைக்காமல் உண்டு 'உண்டுடுத்துப் பணிபூண்டு உலகத்தார் போல் திரியும் தொண்டர் விளையாட்டே சுகங்காண் பராபரமே" எனப் பதிகம் பாடி மக்களை ஏய்த்துப் பிழைக்கலாயினர். ஆதுவே பிச்சை எடுப்போர் தொகை மேலும் பெருகியது.

நாடுகளில் நாகரிகம் வளர்ந்து, காட்டுமிராண்டித்தனம் ஒழியவே உலகில் நீதிநெறி உண்டாகியது. அப்போது மக்கள் சமூகமும் ஏராளமாகப் பெருகியது. அவ்வாறு பெருகிய சமூகத்தாரிடையே வாழவகையற்றோரும், வாழ்க்கையில் கசப்புற்றோரும், வறுமையில் வாட்டமுற்றோரும், வாழ்வில் வழுக்கி விழுந்தோரும் இருந்துதான் வந்தனர். அவர்களுக்கும் மேற்கூறிய முறை சுளுவானதாக இருக்கவே அவர்களும் பிச்சைக்காரர்களாக மாறி உயிர்வாழலாயினர். ஆகவே பிச்சைக்காரர் சமூகம் விரிந்து பெருகியது.

மேற்கூறிய நால்வகை நிலைகளிலுமுள்ள பிச்சைக்கார ஆண்களுடன் அந்நிலைகளிலுள்ள பெண்களும் சேர்ந்து கொள்ளவே பிச்சைக்காரர்களின் உற்பத்தி பெருகியது. நம் தென்னாடும் வறுமையின் நெருக்கத்தாலும், துன்பத்தின் துயரத்தாலும் நலிவுற்றது, பொலிவிழந்து வருகிறது.

ஆகவே இத்தகைய வறுமையின் முழுச்சின்னங்களாக விளங்கி நாட்டின் முன்னேற்றத்திற்குத் தடைகளாயுள்ள பிச்சைக்காரர்களைத் திருத்துவதிலும், திருந்தாவிடில் அழிப்பதிலும் அரசாங்கமும், பொதுமக்களும் செய்ய வேண்டிய கடமைகள் பலவுள.

அரசாங்கத்தார், பிச்சைக்காரர்களின் உற்பத்தியைக் குறைக்கும் பொருட்டு பிச்சைக்காரர் சமூகத்தையே ஆண்கள், பெண்கள் என்ற இரு பெரும் பிரிவுகளாக முதலாவது பிரித்து ஒதுக்கிவைக்க வேண்டும். பின்னர் அவ்விரு பிரிவிலும் உழைக்கச் சக்தியுள்ளோர், சக்தியற்றோர் எனப் பிரித்து, உழைக்கச் சக்தியுள்ளோருக்கென்றே பல கைத்தொழிற்சாலைகளமைத்து அவரவர் நிலைக்கேற்ற தொழில் முறைகளைக் கற்பித்து அதற்கேற்ற கூலியும் வழங்கி சுகாதார வசதிகளும் செய்து கொடுக்க வேண்டும். இவைகளிலும் முக்கியமாக எல்லோருக்கும் ஆரம்பக்கல்வியளிக்க வேண்டும். அடுத்தபடியாக உள்ள உழைக்கச் சக்தியற்றோரை (அவர்கள் பெரும்பாலும் வியாதிக்காரர்களாகவே இருப்பார்களாதலால்) மக்கள் வாழும் பிரதேசங்களுக்கு வெகு தொலைவில் மருத்துவச்சாலைகளை ஏற்படுத்தி அதன் மூலம் அவர்களின் நோய்களைக் குணப்படுத்தலாம். அவ்வாறு குணப்படுத்த முடியாத நோயாயின் விஷ மருந்தை 'இஞ்செக்ஷன்' கொடுத்து உயிரைப்போக்கி ஆழக்குழிகளில் கிருமி நாசினி மருந்துகளுடன் புதைக்கவேண்டும். இந்நிலையினை ஏற்படுத்திய பின் அரசாங்கத்தார் பிச்சை எடுப்பதையே சட்ட விரோதமான தொழிலாக்கிப் பிச்சையிடுவோரையும் தண்டிக்கவேண்டும்.

மக்களோவெனில் தாங்களும் பிச்சை எடுக்காமலும்; எடுப்போர்க்குப் பிச்சையிடாமலும்; எடுப்போரை அரசாங்கத்தாரிடம் ஒப்புவிப்போர்களாகவும்; மதச் சார்பாக அன்னதானம், தருமம் முதலியன செய்யாமல் அவைகளையே பிச்சைக்காரர்களை நல் மக்களாகத் திருத்துவதற்குப் பணமாக உபயோகிக்கக கிளர்ச்சி செய்து நம் தென்னாட்டை பொன்னாடாக்க வேண்டும்

இவ்வாறு செய்வதால் மக்கள் சமுகத்தில் பலவித நோய்கள் பரவாமலும்; அநீதி குறைந்தும்; சமதாமம் தழைத்தும்; ரோடு, பஸ் ஸ்டாண்டு, கடற்கரை, சினிமா நிலையம், ரயில், கோவில், முதலிய இடங்களில் நமக்குப் பிச்சைக்காரர்களின் உபத்திரவம் இல்லாமலும் போகும். நம் திராவிடநாடும் வளங்கொள்ளும். இத்துறையில் அரசாங்கத்தாரும், மக்களும் ஈடுபட்டு உழைப்பார்களா?

"சீலன்"

★

குடி அரசு

11—12—48 சனிக்கிழமை.

## "எங்கப்பன் குதிருக்குள் இல்லை"

"இன்றைய ஆளவந்தார்கள், எவ்வளவுதான் "பத்தினி" வேஷம் போட்டுப்பார்த்தாலும் உண்மையான சொரூபத்தை நாட்டு மக்கள் கண்ணிலிருந்து மறைத்துவிட முடியவில்லை. காங்கரஸ்காரர்கள் ஓரளவுக்கு அழிவு வேலையில் சிறந்தவர்களே தவிர, ஆக்க வேலைக்குத் தகுதியற்றவர்கள் எனப் பேர் எடுத்து விட்டார்கள். நிர்வாகத்தைக் குறை கூறக்கற்றுக் கொண்டவர்களேதவிர நிர்வாகத்தைத் திறம்பட ஏற்று நடத்தும் தகுதியில்லாதவர்கள் எனக் காட்டிக்கொண்டு விட்டார்கள். உண்மையில் தேசியப் பற்றுடையவர்கள் என்றால் நிர்வாகப் பொறுப்பிலிருந்து நீங்கி விடுவதே உத்தமம்" இது நம் கருத்தல்ல! காங்கரஸ் இயக்கத்தில், அடி நாளிலிருந்து பணியாற்றி வந்தவர்களும், சுயநலமோ பதவி மோகமோ அற்ற தூயவர்கள் என்று காங்கரஸ்காரர்களாலேயே புகழப்படுபவர்களுமான, கொண்டா வெங்கடப்பய்யா போன்றவர்களால் அளிக்கப்பட்டு வரும் நற்சான்றுகளின் சாராம்சம்! நம் மாகாணக் கவர்னர் நை போன்ற வெளியேறிய வெள்ளையர்களால் இந்தியநாட்டு நிர்வாகிகளுக்கு, அவர்களின் "இன்பக் கலவிக்கு"ப் பிறகு இயம்பப்பட்டிருக்கும் சர்டிபிக்கேட்! வெள்ளிப் பணத்தையோ வேறு பொருள்களையோ, இரகசிய லஞ்சமாகக் கொள்ளாமல், தங்கஸ்தூபிகளையே பகிரங்கமாகச் சன்மானம் பெற்றுவரும் சர்தார் போன்ற மேலிடங்களாலும் வேதனையோடு அங்கீகரிக்கப்படும் உண்மை!

உண்மை என்ன? காங்கரஸ் மகாசபையின் ஸ்தாபன அமைப்பு அப்படி! காங்கரசைப்பொருளால் வளர்த்து வந்த பனியாக்கள்—வணிக வேந்தர்கள், வெள்ளையன் வெளியேறிவிட்ட இப்போது சரியான சுரண்டல் இயந்திரத்தை அமைத்துவிட வேண்டுமென்று துடிதுடிக்கிறார்கள்! அதற்கு மற்ற நாட்டவர்களைப் பங்காளிகளாகச் சேர்த்துக்கொள்ளவேண்டும்என்று செயலிலும் அவ்வாறே செய்கின்றனர்! தந்திரப் புத்தியாலும் மத ஆதிக்கத்தாலும் காங்கரசை வளர்த்து வந்த பார்ப்பனர்கள்—மத ஆதிக்கக்காரர்கள் தங்களின் வருணாச்சிரம அமைப்பு நிலைபெற்று, வற்றாத பொருள் வருவாய்க்கு இடமாக்கிவிடவேண்டுமென்று, கொஞ்சமும் கூச்சமில்லாமல் மனிதத்தன்மையைக் காற்றில் பறக்கவிட்டவர்களாய் விளங்குகிறார்கள்! கூலிக்காக, மாதச் சம்பளத்துக்காகச் சுயபுத்தியை ஒதுக்கி விட்டு, உடம்பால் கஷ்டப்பட்டுக் காங்கரசுக்கு உடலுழைப்பைத் தந்த அன்னக்காவடிகளோ, "பட்டதெல்லாம் போதும் பராபரமே! பாரில் சுகமாக வாழ வழி என்ன? என்கிறார்கள்! "இந்த நாட்டில் துன்பமேன்? தொல்லையேன்? எல்லாவற்றுக்கும் வெள்ளையனே காரணம்" என்று சரணம் பாடி முடித்துவந்த விளம்பர கருத்தாக்கள் எல்லாம், வெள்ளையன் வெளியேறிய பிறகு துன்பமும் தொல்லையும் வளர்ந்தோங்குவதைக்கண்டு, அதற்கு அடிப்படைக்காரணம் என்ன என்பதை அறிந்தும் அறிவிக்க முடியாதவர்களாய், "நமக்கென்ன? நம்பிழைப்புக்கு அது நல்லதல்ல" என்று முடிவு கட்டிக்கொண்டு, நாட்டு மக்களின் அறிவுக்கு நலிவைத் தேடுவதில் முனைந்திருக்கின்றனர்! வாழ்வுக்குப் பிறர் தயவை எதிர்பாராமல், காங்கரசை உண்மையென நம்பி உழைத்து வந்த உத்தமர்கள் எல்லாம், அதன் உண்மைச் சொரூபத்தையறிந்து ஒதுங்கி விட்டார்கள், உள்ளம் குமுறி ஒதுங்கப்பார்க்கிறார்கள், ஊழலை ஒழித்துக்கட்ட முடியாதா? என்று பெருமூச்சு விடுகிறார்கள்! வெறியுணர்ச்சியால் ஈடுபட்டுழைத்த வீர வாலிபர்கள் எல்லாம், செய்யும் வகையறியாது சிந்தை கலங்குகின்றனர், வேற்றுப் பாசறைகளில் வேகமாக நுழைந்து கொண்டிருக்கின்றனர்!

காங்கரஸ் ஸ்தாபனம் என்கிற வருமானத் தொழிற்சாலையில் ஈடுபடாத பிற மக்களோ இன்று காங்கரஸ் தியாகிகளின், வீரர்களின், சூராதி சூரர்களின் சொந்த நடத்தையைக் கண்டு காறித்துப்புகிறார்கள்.

மந்திரிகளிலிருந்து மட்டரகமான ஒரு காங்கரஸ் தொண்டன் வரையில், பங்காளியுணர்ச்சியோடு தலை நிமிர்ந்து நின்று சம்பாதிப்பதிலேயே கவனம் செலுத்தி வருகின்றனர். தன்வீட்டில் கிரிக்கெட் மைதானம் அமைத்து அதை அரசாங்கச் செலவில் சேர்க்கப்பில் அனுப்புவோரும், சொந்த வீட்டுக்கு ரிப்பேர் செய்து அந்தச் செலவை அரசாங்கப் பணத்திலிருந்து பெற முயற்சிப்போரும் மந்திரிகளிலேயே இருக்கின்றார்கள் என்று மக்கள் வெளிப்படையாகப் பேசுகிறார்கள்.

காங்கரஸ் தொண்டன் என்கிற ஒவ்வொரு பேர்வழியும் தன் பேராலோ அல்லது தன் சொந்தக்காரர் பேராலோ ஒவ்வொரு லைசென்சுக்கும் போட்டி போடுவதில், இப்படியா வெட்கங்கெட்டுச் சிண்டைப்பிடித்துக் கொள்வது? என்று சிரிப்பாய்ச் சிரிக்கிறார்கள் மக்கள்.

பொதுஜனம்! பொதுஜனம்! என்று பேசி, எங்களைச் சுரண்டிப் பிழைப்பதுதானா சுயராஜ்ஜிய வாதிகளின் சித்தாந்தம் எனச் சோகத்துடன் கேட்கின்றனர் "மகாஜனங்கள்"

ஆனால் நாட்டை ஆளவந்த மந்திரிகளோ பொதுவாக இந்த நிலைமை நீடிக்கவேண்டுமென்கிறார்கள். அடுத்தடுத்துவரும் தேர்தல்களிலும் தாங்களே வெற்றி பெற வேண்டுமென விரும்புகிறார்கள். அதே நேரத்தில் தங்களின் ஏமாற்றுக் காரியங்களும் இனிதே நடந்தேற வேண்டுமென்றும் ஆசைப்படுகிறார்கள்.

இன்றையக் காங்கரஸ்காரர்கள் என்பவர்களின் நாணயமோ, யோக்கியதையோ இல்லாத நடவடிக்கைகளைக் குறித்து மக்கள் பேசிக் கொள்வதைஎடுத்துக்காட்டுவதைக் காட்டிலும், மந்திரிகள் பேசுவதையே இங்கு குறிப்பிட வேண்டும்.

"நம்மவர்களோ பதவியைத் தேடி அலைகின்றனர். சிலருக்கு மந்திரிப்பதவி விருப்பம்! சிலருக்

குப் பார்லிமெண்டரி காரியதரிசிப் பதவி விருப்பம்! சிலருக்கு காங்கர்ஸ் ஸ்தாபனத்தில் நிர்வாகப் பதவிகள் வேண்டும்! இப்போது கண்ட்ரோல்கள் வந்துவிட்டதால் கடைகள் முதலியவற்றிற்கு லைசென்ஸ் பெறக் காங்கரஸ்காரர்கள் விழுந்தடித்து ஓடுகின்றனர்! காங்கரஸ்காரர்களாகிய நாம் இத்தகைய போட்டியில் இறங்கினால் அதோ கதியாகி விடுவோம்''

இது உள்நாட்டு மந்திரி சர்தார் [ஜி] அவர்கள் 2 வாரத்துக்கு முன்னால் பொதுக்கூட்டத்தில் பேசிய பேச்சு!

காங்கரஸ் பதவியேற்று, அதன் பின் சுயராஜ்ஜியமும்வாங்கி, ஆண்டு 2 ஆகப்போகிற இந்த நேரத்தில் தானா காங்கரஸ்காரர்களின் சுயரூபம் தெரிய ஆரம்பித்தது? அப்படியானால் முன்பு ஏன் வெளிப்படவில்லை? இதனை மந்திரியார் கூறவில்லை!

காங்கரஸ் காரர்களின் யோக்கியதை என மந்திரியார் அறிவித்திருப்பது, பதவிகளில்சஞ்சரிக்கும் நிலையில் உள்ள கனவான்களைப் பற்றியேயாகும்! சாதாரணக் கிராமங்களில் காங்கரஸ் தலைவர்கள் என்கிற பேர்வழிகள் எப்படிக் காட்டுமிராண்டித்தனமாய், சர்வாதிகாரிகளாய் நடந்து கொள்கிறார்கள் என்பதைப்பற்றி அவர் குறிப்பிடவில்லை! ஒரு வேளை அவர் வாழும் ''லோகத்திற்கு'' கிராமங்களைப் பற்றிய செய்தியே கிட்டாமலுமிருக்கலாம்! மேலும், மந்திரியார் எவ்வளவு தூரம் ஊழல்களைத் தெரிந்து, பொறுக்கமுடியாத நிலையில் இவற்றை வெளியிட்டிருக்கவேண்டும்? என்பதைச் சற்று எண்ணினால் மந்திரியார் கூறியிருப்பது சில, கூறாதன பல என்கிற முடிவுக்குத்தானே எவரும் வரவேண்டும்?

காங்கரஸ் மந்திரிகளில் ஒருவரான சர்தார் அவர்களே, காங்கரஸ் தோழர்களான தன் கூட்டாளிகளைப் பற்றி ஏன் இப்படி அப்பட்டமாகக் கூறவேண்டும்? என்று சற்று எண்ணிப்பார்த்தால் அதற்கு உண்மையான காரணம் தெரியாமல் போய்விடாது!

புள்ளி விபரத்தோடு சில பத்திரிகைகள் கூற, அது பொதுமக்கள் மன்றங்களில் எதிரொலிக்கவும், கண்ணால் கண்டு காறியுமிழவுமான நிலை யேற்பட்ட பிறகு தன்னையும், தன் சகாக்களையும் மக்களின் வெறுப்பிலிருந்து மாற்றிவிட வேண்டுமென்கிற காரணத்தைத் தவிர இதற்கு வேறு என்ன சொல்லமுடியுர்?

மக்கள் வெறுப்புக்கு மந்திரிகளும் ஆளாகி வருவதைத் தடுக்க நம் மாகாண சர்க்கார் ஒரு புதிய முறையைக் கையாண்டிருக்கின்றார்கள். அதுதான் அரசாங்க உத்தியோகஸ்தர்களைப் பற்றி, அவர்களுக்குப் புத்தி சொல்லி இந்த மாதம் 2-உ வெளியிட்டிருக்கும் அறிக்கை!

''சில சர்க்கார் உத்தியோகஸ்தர்கள் பொது மக்களிடம் நடந்துகொள்ளும் வகை அரசாங்க நிர்வாகத்தில் ஏற்பட்டிருக்கும் மாறுதலுக்குத் தகுந்தபடி, மக்களின் அபிமானம் பெற்றிருக்கும் சர்க்காரில் இருக்க வேண்டியபடி இல்லையென்று புகார்கள் வந்திருக்கின்றன. ஒரு சிலரைத்தவிர இதர சர்க்கார் உத்தியோகஸ்தர்கள் தங்களது நடத்தை பொது மக்களுக்கும் நாட்டுக்கும் ஊழியம் செய்வதைப் பிரதிபலிக்கும் விதம் இருக்கவேண்டுமென்பதை உணரவில்லை என்பதை சர்க்கார் அறிவர். தங்களிடம் ஆலோசனைக்காகவோ அல்லது நிவாரணத்துக்காகவோ வரும் பொது மக்களிடம் சர்க்கார் அதிகாரிகள் அசிரத்தையாகவோ அல்லது அவமரியாதையாகவோ நடந்து கொள்வது ரொம்பத் தவறு. யதேச்சாதிகார ஆட்சிமுறை ஒழிந்துவிட்டது, இனி அது திரும்பாது. தற்போது ஆளுவோருக்கும் ஆளப்படுவோருக்குமிடையே வித்தியாசம் கிடையாது என்பதை சர்க்கார் உத்தியோகஸ்தர்கள் தங்களது நடத்தையால் பொதுமக்களுக்கு உணர்த்தவேண்டும். ஜனங்களிடம் உத்தியோகஸ்

# இந்தியால் தமிழ் கெடத்தான் செய்யும்!

## கெட்டால் என்ன குடிமுழுகிப் போய்விடும்!

இந்தியால் தமிழ் கெடும் என்று இந்தி எதிர்ப்பாளர்கள் கூறுகிறார்கள். அது எப்படிக் கெட்டுவிடும்? அதுவும் எங்கள் ஆட்சியிலா? இது வீண் பிரச்சாரம்! மக்களை ஏமாற்றும் தந்திரம்! என்று கூறி வருகிறார்கள் நமது மதிமிக்க மந்திரி குழாத்தினர்.

இந்தியாவின் தேசிய பாஷையாக இந்தியும், தேசிய லிபியாக தேவ நாகரியுமே இருக்கவேண்டுமென்பதை வற்புறுத்தி மத்திய சட்டசபைத் தலைவர் தோழர் மாவ்லங்கர் ம. மா. சபைத் தலைவருக்கு ஒரு கடிதம் இந்த மாதம் 6-உ எழுதியிருக்கிறார். அக் கடிதத்தில்,

''சமஸ்கிருதத்தினின்றும் பிறந்த பல் வேறு பிராந்திய பாஷைகளின் பொதுச்சொற்களை அவற்றில் உபயோகிப்பது அவசியமாகையால் நாளாவட்டத்தில் மைனார்ட்டிகளின் தனிப்பாஷை அழிந்து விடுவது நிச்சயம் எனினும் இதை நான் ஒரு தீங்கென்றோ கெட்ட செயலென்றோ கருதவில்லை. இல்லாவிடில் மெஜாரிட்டி மக்களின் பாஷை பண்புச் சுதந்தரம் பறிபோக நேரும். எந்த ஒரு குழுவின் கலாச்சாரமும் மொழியும் நாசமாகித்தான் தீரவேண்டும் எனின், அவை மைனாரிட்டியினுடையவையாகவே இருத்தல் நலமேயன்றி மெஜாரிட்டியினுடையவை அல்லவென்பது தெளிவு''

இதைப் பார்த்த பிறகு நமது இந்தி தாஸர்கள் என்ன செய்வார்கள்? தமிழ் முர்தாபாத்! இந்தி ஜிந்தாபாத்! என்கிற படலத்தை விரைவாக வெளிப்படையாகத் தொடங்கினாலும் தொடங்கலாம்!

தர்கள் பழகும் போதும், உத்தியோகக் கடிதப் போக்குவரத்திலும் இப்புதிய உணர்ச்சி பிரதிபலிக்க வேண்டும் என்று சர்க்கார் உத்தியோகஸ்தர்களுக்கு உத்திரவு பிறப்பிக்கப்பட்டிருக்கிறது''

இந்த அறிக்கை அரசியல் நிர்வாகத்திலுள்ள ஞானசூனியத்தைக்காட்டுவது என்பது ஒருபுறமிருக்கட்டும். காங்கரஸ்காரர்களின் யோக்கியதைகள் அம்பலமாவதற்குக் காரணம் அதிகாரிகள்தான் என்கிற குற்றச்சாட்டு. இதில் இல்லையா என்று கேட்கிறோம்.

சர்க்கார் அதிகாரிகளைப்பற்றி மந்திரிகளுக்குப் புகார் கூறுவோரும், அதிகாரிகளிடம் நெருங்கி அவர்கள் ஆலோசனையைப்பெறுவோரும், அதிகாரிகளோடு கடிதப் போக்குவரத்து வைத்துக்கொண்டிருப்பவர்களும் யார்? யார்? இதை விளக்கிக் கூறவில்லை மந்திரிகளின் [சர்க்காரின்] அறிக்கை. பொதுவாக, பொது மக்கள் என்றே குறிப்பிட்டிருக்கிறார்கள். இந்தப் பொதுமக்கள் என்பவர்கள், ''மந்திரிகள் நம்மவர்கள்'' என்று நடக்கும் மதோன்மத்தர்களான, அங்கங்கேயுள்ள காங்கரஸ் வாலாக்கள் என்பதைத் தவிர வேறு யாரை உண்மையில் குறிப்பிடும்? காங்கரஸ்காரர்கள் என்று தங்களைக் கொள்ளாத எவராவது—அதாவது உண்மையாகவே பொதுமக்கள் என்று குறிப்பிடத்தக்க நிலையிலுள்ள எவராவது சர்க்கார் அதிகாரிகளோடு நெருங்கிப் பழகுகின்றார்கள் என்றோ, அவர்கள் ஆலோசனையை வேண்டி அவர்களிடம் செல்லுகிறார்கள் என்றோ அதற்காக அவர்களோடு கடிதப் போக்குவரத்தில் ஈடுபட்டிருக்கிறார்கள் என்றோ, மந்திரிகளுக்கு அவர்களைப்பற்றிப் புகார் கூறியிருக்கிறார்கள் என்றோ சர்க்கார் கூறிவிட முடியுமா? அப்படிக் கூறுவதாயிருந்தால் ஏன் இந்த அறிக்கையில் அதை வெளிப்படுத்தவில்லை? காங்கரஸ் எம். எல். ஏக்களும், தன்னைக் காங்கரஸ் காரியதரிசி, தலைவர், கமிட்டி அங்கத்தினர் என்று கூறிக்கொள்வோர்களும்தான் இன்று அதிகாரிகளைச் சுற்றி ''பலாப்பழத்தை ஈ மொய்ப்பது போல்'' மொய்த்துக்கொண்டிருக்கிறார்கள் என்பதையும், அப்படி மொய்ப்பது மக்களுடைய கோரிக்கைக்காக அல்ல, சொந்த லாப வேட்டைக்காகவே என்பதையும் பட்டேல் போன்றவர்கள் மற்றொருபுறத்தில்கூறும் போதே' நம்மாகாண மந்திரிகள் [சர்க்கார்] அவர்களைப் பொது மக்கள் என்று பூசி மெழுகுகிறார்கள் என்றால் அதற்கு அர்த்தம் என்ன?

சர்க்கார் அதிகாரிகளில் பலர் காங்கரஸ்காரர்களின் நாணயமற்ற நடத்தைக்கு ஒத்துழைக்கவில்லை, சில அதிகாரிகள் மட்டும்தான் கூடிக் கும்மாளம் போட்டுக் காலத்திற்கேற்ற கோலம் என்கிறார்கள் என்கிற மனக்குறைதான் இந்த அறிக்கையின் சாராம்சம் என்றால் அதில் தவறு என்ன?

காங்கரஸ்காரர்கள் என்பவர்கள் செய்துவரும் பித்தலாட்ட வேலைகள், தில்லுமல்லுகள் ஆகிய வியாபாரங்களைப்பற்றி, அவற்றினுடைய கேடுகளைப்பற்றி அதிகாரிகள் வாய் திறக்கக்கூடாது என்பதோடு, முடிந்தால் அவர்களுக்காக அவர்களோடு ஒத்துழைக்கவேண்டும் என்று மிரட்டுவதைத் தவிர இந்த அறிக்கை வேறு எதற்குப் பயன்பட்டுவிட முடியும்?

இப்படிக் கேட்பது அதிகாரிகளுக்கு வக்காலத்து வாங்கவேண்டுமென்கிற கருத்தாலல்ல! அதிகாரிகளில் சிலர், அதிகார போதையுடையவர்களாய் உண்மையிலேயே ஏழை மக்களை மிருகங்களிலும் கேவலமாக மதித்து நடத்துகிறார்கள் என்பதையும் நாம் அறிவோம்! ஆனால் அப்படிப்பட்ட அதிகாரிகளைப்பற்றிச் சர்க்காருக்குப் புகார் போகவில்லை என்பதையும், அந்த அதிகாரிகளைப் பற்றிச் சர்க்கார் குறிப்பிடவில்லை என்பதையும் சர்க்காரின் அறிக்கையே தெளிவாக்கி விடுகிறது! கொஞ்சநஞ்சம் நேர்மையில் நம்பிக்கையுடையவர்களாய், வாங்குகிற சம்பளத்துக்கு உண்மையாய் உழைக்கவேண்டுமென்கிற போக்குடைய அதிகாரிகளுக்குக்கூட இந்த அறிக்கை தவறான பாதையையல்லவா காட்டுகிறது? என்பதனாலேயேயாம்.

இந்த அறிக்கையைக் கண்ட அதிகாரிகள், பிழைத்துக்கொள்ள வேண்டுமென்கிற ஆசையுடையவர்கள் என்ன செய்வார்கள்? நமக்கேன் இந்த வீண் பொல்லாப்பு என்ற மனப்பான்மையோடுதானே, காங்கரஸ்காரர்கள்சம்பந்தப்பட்ட விஷயங்களில் நடந்து கொள்ளுவார்கள்? அதன் எதிரொலி எப்படியிருக்கும்? அதிகாரிகள் அப்படி நடந்துகொள்வது நாட்டுக்கு நலம் தருவதாகுமா? என்பதை எண்ணிப்பார்க்கும் எவர்தான் கவலை கொள்ளாமல் இருக்க முடியும்?

மந்திரிகளின் சட்ட திட்டங்களை, நிறைவேற்றி வைக்கவேண்டிய பொறுப்பிலுள்ள அதிகாரிகளைப்பற்றி, மந்திரிகள் என்பவர்கள் அதிகாரிகளைக் குறைகூறி மக்கள் முன் அறிக்கை சமர்ப்பிக்கின்றார்கள் என்றால், உண்மையாகவே அதிகாரிகள் திருந்தவேண்டுமென்பதுதான் இதற்குக் கருத்தா? அதிகாரிகளை மக்கள் அலட்சியமாகக் கருதுவதற்கல்லவா இது பயன்படும்? கையாலாகாத கணவன் தன் அடிமை மனைவியைப் பற்றி ஊர்க்காரர்கள் முன்பு குறை கூறித் தூற்றுவதற்கும், இதற்கும் வித்தியாசம் என்ன?

வெள்ளையன் வெளியேறிய பிறகு இதுவரை ஒரு துறையிலும் முன்னேற்றமென்பதில்லை, வரியைத் தவிர, பசி பட்டினியைத் தவிர. இதற்குக் காரணம் தேடும் மக்கள் முன்னால் தங்களைச் சத்தியசந்தர்களக-ஏழை பங்காளர்களாகக் காட்டிக்கொள்ள விரும்புகிறார்கள் காங்கரஸ் மந்திரிகள். அந்த அடிப்படையில், பொதுமக்கள் என்கிற நிலையிலுள்ள பொதுமக்களை ஏமாற்றவே, இந்த அறிக்கை தயாரிக்கப்படவில்லை என்பதைச் சர்க்கார் வற்புறுத்தினாலும் கூட, இந்தப் ''புத்திமதி'' அறிக்கையால், எத்தனை திராவிடக் கீழ் உத்தியோகஸ்தர்கள் ஆரிய மேல் உத்தியோகஸ்தர்களால் அலைக்கழிக்கப்படுவார்கள் என்பதை அவர்கள் அறியாதவர்கள் என்று கூறிவிட முடியுமா?

யதேச்சாதிகார ஆட்சிநடத்தும் மந்திரிகள், யதேச்சாதிகாரமா, அது கூடாது, அது பட்டொழிந்ததாயிற்றே என்று பரமோபதேசம் செய்கிறார்கள்! இன்றைய மந்திரிகளின் யதேச்சாதிகார ஆணவப் போக்கிற்கு நூற்றுக்கணக்கான உதாரணங்களை — வெள்ளையன் காலத்தில்,வெள்ளையனின்யதேச்சாதிகாரம் என்று இவர்கள் எவற்றைக் குறிப்பிட்டார்களோ அவற்றையே இவர்களும் செய்து வருகிறார்கள் என்பதை நாம் பலமுறை எடுத்துக்காட்டியிருக்கிறோம். சட்டசபையிலும் நேருக்குநேர் பலர் எடுத்துக்காட்டி வந்திருக்கிறார்கள்,

அப்பேர்ப்பட்ட நிலையிலுள்ள இவர்கள், அதிகாரிகளைக் குறை கூறி இப்போது நடப்பது யதேச்சாதிகார ஆட்சி அல்ல என்றால் "எங்கப்பன் குதிருக்குள் இல்லை" என்பதைத் தவிர வேறு என்ன? இதனால் மக்களின் வெறுப்பு அதிகாரிகள் மீது பாயாது என்பதும், காங்கரஸ் மந்திரிமார்கள் எப்படித்தான் வேஷம் போட்டாலும், யாரைக் குறைகூறினாலும் உண்மைச் சொரூபத்தை மறைத்துவிட முடியாதென்பதும் உறுதியினும் உறுதி!

★

## கார்த்திகைப் பண்டிகை.

—()●()—

இந்து மதத்தைச் சேர்ந்தவர்கள் என்பவர்களின் பகுத்தறிவுச் செல்வம், எப்படிக் கொளுத்தப்பட்டுத் தீக்கிரையாக்கப்பட்டு வருகிறது என்பதற்கு நல்ல எடுத்துக்காட்டு கார்த்திகைத் தீபம். ஆண்டுக்கொருமுறை குடம் குடமான நெய்களைக் கொட்டி நெருப்பெரித்துக் காட்டும் 'மகா புனிதமான' சிறு பிள்ளை விளையாட்டு வேடிக்கை, இந்த ஆண்டிலும் இன்னும் 3, 4-நாட்களில் வரப்போகிறது என்பதைப் பார்ப்பன நவீனப் பஞ்சாங்கங்கள் [தேசிய தினசரிகள்] அறிவித்து விட்டன. அறிவும், செல்வமும், அருமையான காலமும் வீணாக்கப்படும் இந்தக் கொளுத்தும் பண்டிகைக்கு "மகா ஜனங்களே வந்து போவீர்! மாபெரும் புண்ணியத்தைக் கட்டிக் கொள்வீர்!" என்று கூறிவிட்டார்கள் நமது மதச் சார்பற்ற சர்க்கார். உணவுக்குத்திண்டாட்டமில்லை, ரூபாய்க்கு 2-படி அரிசி தர ஏற்பாடு என்கிறது அதிகாரிகளின் அறிக்கை. திருவண்ணாமலையைச் சுற்றிலும் காலரா! ஆனாலும் அக்கரையில்லை! புறப்படுவதற்கு முன்னே காலரா தடுப்பு ஊசி போட்டுக் கொள்ளுங்கள்! எப்படியும் வந்து போங்கள்! என்று அறிவிக்கின்றார்கள் மதச்சார்பற்ற சர்க்காரின் சுகாதார அதிகாரிகள்.

இவ்வளவு தடபுடலாக சர்க்கார் வரவேற்புக் கூற, மத ஆதிக்கக்காரர்கள் மடமையை விலை கூறி விற்க, பார்ப்பனர்கள் தெய்வத்தின் பேரால் பகற்கொள்ளையடிக்கும் இந்தப் பண்டிகை ஏன் கொண்டாடப்பட்டு வருகிறது என்பதை நாம் பலமுறை விளக்கி வந்திருக்கிறோம். இருப்பினும் சுருக்கமாக இப்போதும் கூறுகிறோம்.

பிர்மா, விஷ்ணு, சிவன் என்று மூன்று கடவுள்கள். ஒரு காலத்தில் பிர்மாவுக்கும் விஷ்ணுவுக்கும் யார் தான் பெரியவர்கள் என்கிற விஷயத்தில் சண்டை உண்டாகி விட்டதாம். வாய்ச் சண்டையில் ஆரம்பித்தது கைச் சண்டையில் முடிந்தும் சண்டை நின்ற பாடில்லையாம். இந்த 2 கடவுள்களும் எதற்காகச்சண்டைபோடுகிறார்கள் என்பதை யறிந்து 3வது கடவுளான சிவன் அவர்களுக்கு மத்தியில் ஜோதி உருவாக வந்து நின்றாராம். சண்டை போட்டவர்கள் அதை நிறுத்திவிட்டுத் திகைத்து நிற்க, ஜோதிச்சிவன் அவர்களைப் பார்த்து, இந்த ஜோதியின் அடியையோ முடியையோ யார் முதலில் பார்த்துவிட்டு வருகிறார்களோ அவர்களே பெரியவர் என்பதாக அசரீரியாகச் சொன்னாராம். உடனே விஷ்ணு பன்றியாக உருவெடுத்து அடியைக் காணப் புறப்பட்டாராம். பிர்மா அன்னப்பறவையாக உருவெடுத்து முடியைக் காணப் பறந்தாராம். பறந்தவர் பறந்துகொண்டேயிருந்தாராம். வழியில் ஒரு தாழம்பூ கீழ் நோக்கி வந்ததாம். ஏ தாழம்பூவே! நீ எங்கிருந்து வருகிறாய் என்று பிர்மா அதைக்கேட்டாராம். நான் கோடிக்கணக்கான வருஷங்களுக்கு முன்னால் பரமசிவனுடைய முடியிலிருந்து புறப்பட்டு வந்து கொண்டிருக்கிறேன் என்று பதில் கூறியதாம் அந்தத் தாழம்பூ. தாழம்பூவின் சரித்திரத்தைக் கேட்ட பிர்மா தன்னுடைய நிலைமையை எடுத்துச் சொல்லி, தான் முடியைக் கண்டு விட்டதாகக் கூறுவதற்குச் சாட்சி சொல்ல வேண்டுமென்று கெஞ்சினாராம். அதற்குத் தாழம்பூ ஒத்துக்கொள்ளவே ஜோதியிடம் வந்துமுடியைக் கண்டு விட்டேன் என்றாராம் பிர்மா! ஆமாம், பார்த்து விட்டார் என்றதாம் தாழம்பூ! உடனே சிவன் கோபங்கொண்டு பொய் சொன்னதற்காக இருவரையும் சபித்து விட்டாராம். அதனால் தான் பிர்மாவுக்குக் கோவில் இல்லையாம், தாழம்பூவைச் சிவனுக்குச் சூட்டுவதில்லையாம். பிர்மா சாபம் பெற்ற பிறகு, பிர்மாவும் விஷ்ணுவும் கர்வம் ஒழிந்து பரமசிவனே பெரியவர் என்பதை ஒப்புக்கொண்டு, இதன் அடையாளமாக இந்த மலையின் மேல் ஜோதி வடிவமாக இருக்கவேண்டுமென்று சிவனை வேண்டிக்கொண்டார்களாம். அதற்குச் சிவன் ஒத்துக்கொண்டு ஒவ்வொரு கார்த்திகை மாதக் கார்த்திகை நட்சத்திரத்திலும் நான் இந்த மலையின் உச்சியில் ஜோதியாகக் காணப்படுவேன் என்றாராம். இதுதான் திருவண்ணாமலையில் கார்த்திகை தீபம் கொண்டாடப்பட்டு வருவதற்குக் காரணமாக அருணாசல புராணம் கூறும் கதை.

இந்தக் கார்த்திகைப் பண்டிகைக்கு மற்றொரு கதையும் கூறப்படுகிறது என்றாலும் திருவண்ணாமலைக்கும் அந்தக்கதைக்கும் சம்பந்தமில்லையாதலால் அதை இப்போது விட்டு விட்டு இந்தக்கதையை ஆராய்ந்து பார்ப்போம்.

கதையினுடைய முடிவுப்படி அதாவது சிவன் என்கிற கடவுள் மற்ற இரண்டு கடவுள்களுக்குவாக்குக் கொடுத்தபடி இப்போதெல்லாம் வாக்கைக் காப்பாற்றுவதில்லை என்பது ஒரு புறம் இருந்தாலும், ஆண்டுதோறும் அவரேஜோதியாக நின்று வந்தார் என்பதற்கும் கதைப்படியும் கூட எவ்வித ஆதாரமுமில்லை. அந்தக் கடவுளுடைய பக்தர்கள் தான் அந்தக் கடவுளுடைய மானத்தைக் காப்பாற்றுவதாகக் கருதிக்கொண்டு, நாம் அறிந்தவரை செயற்கை முறையில் ஜோதியை உண்டு பண்ணிக் காட்டி வருகிறார்கள்.

இந்தக் கதையை உண்மையென்று வைத்துக்கொண்டால்,

1. முதலில் கடவுளர்கள் மூன்றுபேர் என்பதை ஒப்புக்கொள்ளவேண்டும்.

2. கடவுளர்கள் ஒருவருக்கொருவர் கர்வத்தால் வாய்ச் சண்டையும் போடுவார்கள், காயம் படாமல் கைச் சண்டையும் போடுவார்கள் என்பதையும் ஒப்புக்கொள்ள வேண்டும்.

3. கடவுளர்களாயிருந்தாலும் மேலே பறப்பதாயிருந்தால் பறவை வடிவமாகவும், கீழே போவதாயிருந்தால் பன்றி வடிவமாகவும் ஆகித்தான் போகவேண்டும் என்பதையும் ஒப்புக்கொள்ள வேண்டும்.

4. கோடிக் கணக்கான வருஷங்களாக வானவெளியில் விட்டா

மல், கருகாமல் வந்துகொண்டிருக்கும் தாழம் பூ என்பதையும் ஒப்புக்கொள்ள வேண்டும். தாழம்பூ வாய் விட்டுப்பேசும் என்பதையும் ஒப்புக்கொள்ளவேண்டும்.

5. கடவுள்களே சமயம்வந்தால் பொய்சாட்சிவிடத் தயாராயிருந்தார்கள், பொய்ச்சாட்சி கூறச் செய்தார்கள் என்பதையும் ஒப்புக்கொள்ளவேண்டும்.

இப்படியாக இந்தக் கதையிலிருந்து, இன்றைய மனிதனின் அறிவுக்கு ஒவ்வாத முறையில் பல இருந்தாலுங்கூட, இந்தக் கதை கடவுள்களுடைய பெருமையைக் காட்டப் பயன்படுகிறதா? அல்லது கடவுள்களுடைய அயோக்கியத்தனங்களைக் காட்ட ஆதாரவாயிருக்கிறதா? என்று சிந்தித்துப் பார்க்கும்படி, நமது முதல் மந்திரி ஓமந்தூராரிலிருந்து மற்றைய பக்த சிரோன்மணிகள் வரை பணிவாகக் கேட்டுக்கொள்ளுகிறோம்.

ஆபாசமான இந்தக் கதையை ஆதாரமாகக் கொண்டு நடத்தப்படும் ஒரு பண்டிகைக்கு எத்தனை மக்களுடைய எவ்வளவு பணம் வீண் செலவாக்கப்படுவது? இதனால் மற்ற ஊர்களுக்கும் தொத்து நோய்கள் எப்படிப்பரவுகிறது? அதனால் உயிர்ப் பலியாவோர் எத்தனை பேர்? என்பதையும் சிந்திக்கட்டும்! பிறகு கூறட்டும் இந்தக் கொளுத்தும் பண்டிகை அவசியந்தானா? மதச்சார்பற்ற சர்க்கார் அதை ஆதரிக்க வேண்டியதுதானா?

[6ம் பக்கத் தொடர்ச்சி]

றும், நாலு ரிஷிகள் போதித்தபடியால் நான்கு வேதங்களாயின வென்றும்'' சொல்கிறார். பார்ப்பனர்களுடைய வேதங்களும் அவைகளை முதலில் போதித்தவர்களும் இப்படியிருக்க, இதற்கு மாறாகப் பார்ப்பனர்கள் நடக்கும் காரணம் என்ன? வால்மீகர் வேடச்சிக்கும், நாரதர் வண்ணாத்திக்கும், மதங்கர் சக்கிலியப் பெண்ணுக்கும், சாங்கியர் பறைச்சிக்கும் பிறந்தார்களென்றும் தெரியவருகிறது. மற்றும் சொல்லவேண்டுமானால் இந்தச் சிறு கட்டுரை இடமளிக்காது.

வேத ஆராய்ச்சி செய்து கடவுளைப் பிரார்த்தித்து வந்த பார்ப்பனர்கள் பிரம்மாவின் முகத்தின் முன் நின்றிறவர்களாய்ப் பாவித்து பார்ப்பனர்கள் பிரம்மாவின் முகத்திலிருந்து பிறந்தார்களென்றும், குன்றொத்த தோள்களுடைய-நாட்டை ஆண்டுவந்த மணிமுடி வேந்தர்களான க்ஷத்திரியரைப் பிரம்மாவின் புயத்திற்குச்சமானமாகப்பாவித்து அவன் புயத்திலிருந்து பிறந்தார்களென்றும், திரைகடலோடி வாணிபம் செய்து பல உணவுப்பண்டங்களை நம் நாட்டிற்கு அளிப்பவர்களான வணிகரை வைசியரென்று கூறி அவர்கள் பிரம்மாவின் வயிற்றிலிருந்து பிறந்தார்களென்றும், பற்பல வேலைகளைச் செய்துவந்த திராவிடரைப் பிரம்மாவின் தொண்டுழியராகப் பாவித்து அவன் பாதத்திலிருந்து பிறந்தார்களென்றும் ஒப்பனையாகச் சொல்லி (சூத்திரர்—வேசி மகன், அடிமை) என்றனர். இதற்கு வீண் போக்காக ரிஷி மூலத்தையும் நதி மூலத்தையும் கவனிக்கக் கூடாதென்றும் கூறுவார்கள்.

இந்நாட்டு மக்களை வஞ்சித்து, வறுமையுற்றவர்களாகவும், வாழ்க்கை வசதியற்றவர்களாகவும், அறிவற்றவர்களாகவும், மனிதத் தன்மையை இழந்து இழி நிலையுற்றவர்களாகவும் இருக்க வாழ்க்கைப் பாதையை வகுத்துக் கொடுத்த வஞ்சகர்தான் இந்தப் பார்ப்பனர். இந்த நாட்டு மக்களை, திராவிடர்களை—வாழ்க்கைத் துறையிலும், சமுதாயத் துறையிலும் விபீடணர்களாகவும் வானரர்களாகவும் ஆக்கும் வரம்பு மீறிய இம்மனிதத் தன்மையற்ற வர்க்கத்தின் குள்ள நரிக் குணத்தைக் குழிதோண்டிப் புதைத்தால்தான் சாதிகள் ஒழிய வழி ஏற்படும்.

பிராணிகளில் எவ்வளவோ இனங்கள் உள்ளன. ஆனால் ஒவ்வொரு இனமும் இனப்பற்றுடன் ஒற்றுமையாய் வாழ்ந்து வருகின்றதைக் காணலாம். ஆறறிவு படைத்த மானிட வர்க்கத்திலே மனிதன் என்ற இனப்பற்றை உணராத மக்களே உள்ளனர். ஒருமனிதனை ஒருமனிதன் வெறுப்பதைக் காண்கிறோம்! ஒருவரை ஒருவர் அழிக்கமுற்படுவதைக் காண்கிறோம்! ஒருவன் உழைக்க மற்றவர் அவன் உழைப்பின்பயனை அனுபவிப்பதைக் காண்கிறோம்! இவ்வளவு அயோக்கியத்தனங்களையும் பித்தலாட்டத்தையும் சாதிசமயங்களைக் கொண்டு திரைபோட்டு வைத்திருக்கிறதையும் மனிதவர்க்கத்தில் தான் காணமுடியும். சாதிப்பிரிவினை யாரால் எப்பொழுது புகுத்தப்பட்டது என்பதை ஆராய்ந்து காலத்தை விரயம் செய்வதைவிட இவைகளால் மனிதசமுதாயம் இன்று அடைந்துள்ள இழி நிலையை எடுத்துக்காட்டி அவைகள் மனிதவர்க்கத்திலிருந்து—சமுதாயத்திலிருந்து ஒழிக்கப்படவேண்டும்.

திராவிடத்திலே, நடமாடும் மனிதர்கள் முதல் படமாடும் தெய்வங்கள் வரை சாதிப் பெயர்கள் அமரத்வம் பெற்று விட்டன. வேளாளர் வீதி, அக்ரகாரம், மகமதியசந்து, அம்பட்டர் சந்து, வண்ணாரப்பேட்டை, சாணார் குப்பம், இடையர்பாளையம், பறையர் சேரி என மக்கள் வாழும் இடங்களெல்லாம் சாதிப்பெயர்களால் அழைக்கப்படுகின்றன. வாழும் இடங்களுக்கு மட்டுமல்ல; 'வரங்கொடுக்கும்' காளியம்மன் முதலிய தெய்வங்களுக்குக் கூட சாதிப்பெயர்களுண்டு. செம்படப் பிள்ளையார், வாணிய சுப்பிரமணியர் என சாமிகளுக்குரிய சாதிப்பெயர்களும் கணக்கில. உயர்சாதியினர் ஆதிக்கத்திலகப்பட்ட 'கடவுளர்கள்' தாழ்த்தப்பட்ட சாதியினர் வாழும் தெருக்களில் பவனிவாரா.

சொல்லில் உயர்வு தமிழ்ச் சொல்லே! என்றார் பாரதி. ஆனால், சாதிச்சழக்குகளின் விபரீத விளையாட்டால் தமிழ்ச் சொற்களுக்குக்கூட உயர்வு, தாழ்வு கற்பிக்கப்படுகின்றது. 'சேரி' என்ற சொல் மக்கள் வாழ்பகுதியை குறிப்பிடுவதாகும். இதில் இழிவுக்குரிய பொருள் எதுவுமில்லை. உயர்ந்த சாதியினர் என்று கருதப்படும் பார்ப்பனர் வாழும் இடங்கள்கூட பண்டைத்தமிழ் இலக்கியங்களில் 'பார்ப்பனச்சேரி' என்றே குறிப்பிடப்படுகின்றன. ஆனால், இன்று 'சேரி' என்ற சொல் தாழ்த்தப்பட்ட மக்கள் வாழ் இடத்திற்கே உரியதாகக் கருதப்படுகிறது. பார்ப்பனர்கள் வாழும் இடத்தை 'அக்ரகாரம்' எனவைத்துக் கொண்டனர்.

மனிதர் மனிதராக வாழவேண்டுமானால், மக்களிடையே நிலவும் அநாகரீகப் பழக்க வழக்கங்கள், அர்த்தமற்ற சடங்குகள்ஒழியவேண்டுமானால்சாதிப் பிரிவினைகள் தொலையவேண்டும்.

எனவேதான் புதுயுகம் பிறக்க, புதிய உலகம் அமைக்கப்பெற, புதிய சமுதாய அமைப்பு தலைதூக்க, சமூகம் முன்னேற, 'சாதிகள் ஒழியட்டும்' என்று கூறுகிறோம்.

''தன்மனோகரன்''


## தேவை.

எங்களது சித்திரத் தையல் [Hand Made Embroidery] ரெடிமேட் ஆடைகள், மேசை விரிப்புகள், தலையணை உறைகள் முதலியவைகளைச் சேகரித்து விற்பனை [Stockist] செய்வோர்களும், பிரதிநிதி இல்லாத சகல இடங்களுக்கும் ஏஜண்டுகளும் தேவை.

விபரங்களுக்கும், நிபந்தனைகளுக்கும் 2 அணா தபால் முத்திரையுடன் விண்ணப்பிக்கவும்.

Dorcas Cottage Industries,
**Krishnan Coil Road, Nagercoil P. O.**

# மதுமரத் தொழிலாளர் துயரம்!

[✱]

“என்னாங்க, இன்றைக்காவது வேலை கிடச்சுதுங்களா?”

“..............”

“என்ன பேசாம இருக்கிங்க, இவ்வள்வு பெரியபட்டணத்திலே—ஒரு வேலைகூடவா உங்களுக்குக் கிடைக்கலே!”

“என்ன பொன்னி நான் செய்யட்டும். மில்லுகளுக்குப போனேன்—அங்க இபப ஆள் எடுக்கிறதில்லேனு சொல்லீட்டாங்க! கடைகளிலேயும் கேட்டுப்பார்த்தேன் அங்கேயும் கையை விரிச்சுட்டாங்க. ஆபீசுகளில், பியூன் வேலைகூட கேட்டுப்பார்த்துட்டேன்! எங்கும் கிடைக்கலையே”

“அப்ப நம்ம இப்படியே பட்டினி கிடந்து சாகவேண்டியதுதானா? நாமாவது பல்லைக்கடித்துக்கொண்டு பொறுத்துக்கலாம், இந்தப் பச்சிளங்குழந்தைகளைப் பாருங்கள்-பசி-பசினு துடிக்கிறதுகளே.”.

✱ ✱

இந்த உரையாடல், சோகச்சித்திரத்திற்காகக் கற்பனையாகத் தீட்டப்பட்டதல்ல.

அன்றாடம் ஆயிரமாயிரம், மதுமதுரத்தொழிலாளர்கள் இல்லங்களில்—இன்று இதுபோல் நடைபெறக்கூடியது.

“மதுவிலக்கை” நடைமுறைக்குக்கொண்டு வந்துவிட்டோமென மகிழ்ந்த மந்திரிமார்கள் களிப்புக் கடலில் நீந்தும் இந்நாளையில்.....

12,000 மதுமாமேறிகள்—வாழ வழியற்று—கண்ணீர் வடித்து நிற்கின்றனர்! சென்னையில் மட்டும்.

எங்கெங்கிருந்தோ வந்த வடநாட்டுஅகதிகளுக்கெல்லாம், வாழ்வளிக்க வசதியளித்தார்களே! இந்நாட்டின் பூர்வீகக் குடிகளான மதுமரத் தொழிலாளர் விஷயத்தில் மட்டுமேன்—ஆளவந்தார்கள் அலட்சியமாக இருக்கவேண்டும்?

நாட்டின் முன்னேற்றத்தில்—நாட்டங் கொண்டுள்ள ஏடுகளெல்லாம் இது பற்றித் தலையங்கம் தீட்டிவிட்ட பிறதும் கூட இதுவரை உருவான பதில் ஏதும், மந்திரிமார்களிடமிருந்து வரவில்லையே ஏன்?

“அவர்கள் மதுமரத் தொழிலாளிகள் தானே! நம் மந்திரி பீடத்தின் அருகில் கூட அவர்களால் வரமுடியாதே! இவர்களால் நம் மந்திரி வாழ்வு மங்கிவிடவா போகிறது” என்ற எண்ணம் போலும். உண்மையாகவே இப்படி எண்ணுவார்களேயானால்—ஏமாற வேண்டியதுதான்.

“அவர்கள் சிலர்—நாம் பலர்” என்று, ஆங்கிலக் கவி “ஷெல்லி” கூறுவதுபோல, “நம் உழைப்பின் பயனால், மந்தகாச வாழ்வு வாழ்பவர் சிலர்—நாமோ பலர், உழைத்து, உழைத்து அவர்களை உல்லாச புரியில் உலவவைக்கின்றோம். இனி அது கூடாது—ஆகவே உரிமைப்போர் துவக்குவோம்! வாரீர்”

உழைக்கும் கூட்டம் உரிமைப் போர் துவக்க இது போல் அழைப்பு விடுத்தால்,...அந்த அழைப்பை ஏற்று அணிவகுத்துச் செல்பவர்கள்—மதுமரத் தொழிலாளர்கள் மட்டுமல்ல—மண் வெட்டும் தொழிலாளர்—மரம் வெட்டும் தொழிலாளர்,—மலையைப் பிளக்கும் தொழிலாளர்—ஏன், இந்நாட்டின் தொழிலாளர் உலகமே, ஒன்று திரண்டு விடுமே!

அப்பொழுது மந்திரிபீடம் மட்டுமல்ல—மணிமுடி தரித்த, மமதை மன்னர்களின் மண்டையே, மண்ணில் சாய்ந்து விடுமே!

சரிதம் கூறுகிறதே இந்த உண்மையை!

ஆகவே இனியாகிலும் அலட்சிய புத்தியுடனில்லாது கள்ளிறக்கின தொழிலாளர்களுக்கு வாழ்வளிக்கும் முறையை நடைமுறையில் காட்டுவார்களா?

“மா. தங்கவேலர்”

## பிறப்பு.

குடியாத்தம் மாசிகம் லேபர் ஸ்கூல் ஹெட் மாஸ்டர் தோழர் எம். ஜான் செல்வராஜ் அவர்களின் வாழ்க்கைத் துணைவியார் 5-12-48ல் ஒரு ஆண் குழந்தைக்குத் தாயானார். தாயும் சேயும் நலம். இதன் நினைவாக குடி அரசுக்கு ரூ. 1 நன்கொடை தரப்பட்டது.

[4ம் பக்கத் தொடர்ச்சி]

சாயான்களும் களவு போனது பற்றி...” என்று சொல்லுமுன், சந்நியாசி “யாம் சொல்லுகிறோம். உம்மிடம் காணாமல் போனவை எமக்குத் தெரியும்; வெள்ளிக்கூஜா ஒன்று ஒரு செப்புக்குடம், பன்னிரண்டு டம்ளர்கள் இவைகள் தானே” என்றார். உடனே பறிகொடுத்தவர் ஆச்சரியப்பட்டு, “ஆமாங்க” என்றார். “உமது வெள்ளிக்கூஜா மட்டும் இருக்குமிடம் மங்கலாகத் தெரிகிறது. ஆனால்... மற்றவை உமது கொல்லைப்புறத்திலுள்ள தென்னை மரத்தின் கீழ் புதைத்து வைக்கப்பட்டிருக்கிறது” என்று சந்நியாசி முடிவாகக் கூறியதும் அவர் அவசரத்துடன் தன் வீட்டை நோக்கி ஓடினார். உடனே மற்றொருவர் வந்து “சுவாமி! நமஸ்கரிக்கிறேன். நான் வைர வியாபாரி. என் கடையிலிருந்த அய்யாயிரம் ரூபாய் பெறுமானமுள்ள வைரக்கற்களும், இன்னும் சில பவுன் நகைகளும் காணாமற் போனதுபற்றித் தங்களிடம்...” என்றார். உடனே சந்நியாசி “கேட்க வந்திருக்கிறீர், அப்படித்தானே?” என்றார். மற்றவர் “ஆம் சுவாமி!” என்று பதிலிறுத்தார். “அப்படியா! வைரக்கற்களெல்லாம் உமக்கு இனி கிடைக்கப்போவதில்லை. ஆண்டவன் திருவருள் அப்படியிருக்கிறது. அந்தப் பவுன் நகைகள் மட்டும் உமது கடையிலுள்ள அலமாரியின் கீழ் தோண்டப்பட்டு அதிலே இருப்பதாகத் தெரிகிறது” என்று சந்நியாசி கூறியதும் அவர் பரபரப்புடன் கடையை நோக்கி ஓடினார்.

கோயிலில் கூடியிருந்த கூட்டத்தாரிடையே ஒரே ஆச்சரியமாயிருந்தது. “சந்நியாசி அடையாளமாகச் சொலகிறாரே பொருட்கள் எல்லாம் இருக்கின்றனவா?” என்று கேட்டுக்கொண்டேயிருந்தனர். இமேரென்று முன் ஜோஸ்யம் பார்த்துச் சென்ற இருவரும், கோயிலுக்குள் நுழைந்து தங்கள் பொருட்கள இருக்கின்றன என்று மகிழ்ச்சியுடன் கூறினர். கூடியிருந்த மக்களுக்கு மீண்டும் ஆச்சரியமாக இருந்தது. எல்லோரும் சந்நியாசியைப் போற்றினர். ஜோதிடம் பார்ப்பதில் நிபுணர் இவரெனப் புகழ்ந்தனர்.

“இந்த சந்நியாசி சொல்வதெல்லாம் வேடிக்கையாக இருக்கிறதே; ஏதோ சூது இருக்கிறது. இவனைச் சும்மா விடக்கூடாது” என்று நாலைந்து சீர்திருத்த வாதிகள் வெளியே நின்று பேசிக்கொண்டிருந்தனர். இது எப்படியோ அந்த சந்நியாசிக்குத் தெரிந்து விட்டது. உடனே எழுந்து “மெய்யன்பர்களே! யாரோ நாலைந்து காலிகள் வெளியே நின்று நம்மை அவதூறாகப் பேசுவதாக அறிகிறோம். அப்படி ஏதாவது கேள்விகள்

கேட்கவேண்டியிருப்பின் நேரில் வந்து கேட்கலாம்'' என்று சொன்னார். உடனே வெளியிலிருந்தவர்கள் உள்ளே போய்க் கேள்விகள் கேட்க நுழைந்தனர். ஆனால் ''வாசலிலிருந்த காவலாளிகள் இருவர் அவர்களை உள்ளேவிட மறுத்துவிட்டனர். அதனால் அந்த சீர்திருத்தவாதிகள் பொறுமையுடனிருந்து, வெளியே வரும்போது கேட்கலாமென இருந்து விட்டனர்.

திடீரென்று கோவிலினுள்ளிருந்து ஒரு பெரும் கூக்குரல் கேட்டது. மக்களெல்லோரும் பரபரப்புடன் அலறியடித்துக்கொண்டு ஓடி வந்தனர். வெளியே நின்றுகொண்டிருந்த தோழர்கள் விபரமறியாது திகைத்தனர். உள்ளிருந்து ஓடி வந்த அனைவரும் ''மதயானை, மதயானை'' எனக்கூறிக்கொண்டு ஓடினர். விபரமாகக் கேட்டதில், அவ்வூரிலுள்ள யானைப்பாகன் ஒருவனிடமிருந்த யானைக்கு மதமபிடித்து, அதை இறுகக்கட்டி வைததிருந்ததாகவும், அது எப்படியோ அறுத்துக்கொண்டு வந்துவிட்டதாகவும், அதனால்தான் எல்லோரும் ஓடிவந்தனரெனவும் தெரியவந்தது. திடீரென வெளியே நின்றிருந்த தோழர்களுக்கு ஒருயோசனை தோன்றியது. ''சந்நியாசியும் இப்படித்தானே ஓடி வருவார், ஆளைப்பிடித்து நிறுத்திக் கேள்விகள் கேட்கலாமென நினைத்து நின்றுகொண்டிருந்தனர். அதற்கேற்றாப்போல் சந்நியாசியும் இரைக்க, இரைக்க ஓடிவந்தார். உடனே தோழர்கள் அவரைப்பிடித்து நிறுத்தி ''கேள்வி கேட்க வரச்சொன்னாயே, இப்போது எங்களின் கேள்வியைக் கேட்கிறீரோ?'' என்று கேட்டனர். உடனே சந்நியாசி ''உங்களுக்கு வேலையில்லை. காலிகளிடம் எனக்கென்ன பேச்சு'' என்று கூறிவிட்டு வேகமாக ஓடினார். தோழர்கள் அவரைப் பின்தொடர்ந்து பிடிக்க முயற்சிக்கும் போது தற்செயலாகத்தாடி பிடிபட்டது; உடனே தாடி தனியாக வந்துவிட்டது. தோழர்கள் வியந்து சந்நியாசியைப் பிடித்துக்கொண்டு போலீஸ் அதிகாரியைத் தேடினர். சந்நியாசி வருவதற்குக் காவலுக்காக வந்திருந்த அதிகாரியும் அப்போதுதான் கோவிலினுள்ளிருந்து ஓடிவந்தார். உடனே தோழர்கள் அவரை அழைத்து விபரத்தைக் கூறினர். போலீஸ் அதிகாரி சட்டைப் பைக்குள் கைவிட்டு ஒரு புகைப்படத்தை எடுத்தார். மாறி மாறி புகைப்படத்தையும் சந்நியாசியையும் பார்த்தார். ''ஆம்! இவன் சந்நியாசியல்ல, திருட்டுப்பயல், கொலைகாரன், போன வருடம் டாக்டர் சந்திரசேகரன் கொலை வழக்கில் சம்பந்தப்பட்டவன். இவனைத் தேடித்தான் ஒரு வருடமாக அலைகிறார்கள். இவன் சாது சந்நியாசியாக ஊரை ஏமாற்றித்திரிகிறான். ''நீங்கள் பிடித்துத் தந்ததற்கு என் நன்றி. தயவு செய்து நீங்களும் ஸ்டேஷனுக்கு வர வேண்டும்'' என்று கூறிவிட்டு ''பளார் பளார்'' என்று நான்கு அறை சந்நியாசிக்குக் கொடுத்தார். அதற்குள் பெரும் கூட்டம் கூடிவிடவே அதிகாரி அந்தப் போலிச் சந்நியாசியை அழைத்துச் சென்றார். கூடியிருந்த மக்கள் விபரமறிந்ததும் ''இந்தப் போலி சந்நியாசிக்குத்தானா இவ்வளவு தடபுடல்?'' என்று காரி உமிழ்ந்தனர். சந்நியாசிக்கு வரவேற்புத் தந்த வள்ளல்களும் செய்தி கேட்டு வெட்கித் தலை குனிந்தனர்.

அன்று மாலை தோழர்கள் ஒரு மாபெரும் பொதுக்கூட்டம் நடத்தினர். ஆயிரக்கணக்கான மக்கள் கூடியிருந்தனர். தோழர் ஒருவர் பேசினார்:-

தோழர்களே! காலையில் ஆயிரக்கணக்கில் ரூபாய் செலவு செய்து சந்நியாசியை இவ்வூர்ப் பிரமுகர்கள் வரவழைத்தனர். வரவழைத்ததால் உங்களுக்குப் பயன் ஒன்றுமில்லையென்றாலும் போலீஸ் அதிகாரிக்குப் பயன் இருந்தது. அவன் சந்நியாசி இல்லை என்பதும், போலி வேடதாரி யென்பதும் உங்களனைவருக்கும் தெரியும். ஜோஸ்யம் சொன்னவர்கள் வீட்டில் திருடியதெல்லாம் இவனும் இவனுடைய சகாக்களுந்தான். விலையுயர்ந்த பொருள்களை வைத்துக் கொண்டு சிறிய சாமான்களை அங்கேயே எங்காவது ஒளித்துவைத்து விடுவதாம். அதனால்தான் சுலபமாக ஜோஸ்யம் சொல்ல முடிந்தது. ஆதலால்தான் நாங்கள் சுவாமி! சுவாமி! எனக்கூறி எய்த்துப் பிழைக்குமவர்களை நம்பாதீர்களெனக் கூறுகிறோம். இவருக்குப் பெயர்தான் சந்நியாசியாம், யோகியாம்......ஆனந்தத்தால் மக்கள் ஆரவாரம் செய்துகொண்டிருந்தனர், அப்போது போலீஸ் ஸ்டேஷனிலே சந்நியாசி வலி பொறுக்க முடியாது ''அய்யோ, அய்யோ'' என்று ஆரவாரம் செய்து கொண்டிருந்தான்.

---

(9ம் பக்கத் தொடர்ச்சி)

என்று இராஜன்மீது பழியைப் போட்டுப் பயலைச் சிறைக்குள் தள்ளி விடலாம்!!! அவ்வளவு தானே.

விஸ்வன்:- ஆகா...! அருமையான யோசனை!! சபாஸ்!!! ரஞ்சா, ராகவா நீங்கள் இருவரும் இருக்கிற வரை எனக்கு என்ன குறைவு? உம். இதோ நூல் பேல்கள் இருக்கும்ஸ்டோர் சாவி! ஒருவருக்கும் தெரியாமல், வேண்டிய மட்டும் நூல் பேல்களை எடுத்துப் பிளாக் மார்க்கட்டில் விற்று விடுங்கள்! பழியை இராஜன் மீது சுமத்தி விடுவோம்!! அஹ்ஹஹ்ஹ ஹஹ்ஹஹா.......!!!

காட்சி 9.

[வீதி.]

உறுப்பினர்:- இராஜன், இரஞ்சன், இராகவன்.

கதை அமைப்பு:- [விஸ்வனுடைய நண்பர்கள் இராஜனைச் சந்தித்து, அவனுடைய மனப்பான்மைகளை அறிந்து கொள்கின்றனர்.]

இரஞ்சன் & இராகவன் } [எதிரில வரும் இராஜனைக் கண்டதும்] குட்மார்னிங் ராஜா! குட்மார்னிங்!!

இராஜன்:- வணக்கம்! வணக்கம்!!

இரஞ்சன்:- ராஜா! உனக்கு நடேசா மில்லில் உத்தியோகம் கிடைத்ததை அறிந்தோம்! அதனால், உன்னைப் பாராட்டுகிறோம்!!

இராஜன்:- வயிற்றுப் பிழைப்பிற்கு வழி கண்டு பிடித்துவிடும் திறமை ஒன்றுதானே இந்நாட்டில் வாழும் வாலிபனின் வல்லமையை அளக்கும் அளவு கோலாக இருக்கிறது! அந்த முறையை அநுசரிக்கும் நீங்கள் என்னைப் பாராட்டுவதில் என்ன ஆச்சரியமிருக்கிறது?

இராகவன்:- என்னப்பா ராஜா! வயிற்றை நிரப்ப வழியில்லாவிட்டால் வாழ்க்கையை நடத்த முடியுமோ?

இராஜன்:- வாழ்வெல்லாம் வெறும் வயிற்றுப் பிழைப்பிற்கே என்றிருந்தால், விலங்குகளாகவே வாழ்ந்திருக்கலாமே...?

இரஞ்சன்:- அப்படியானால், மனிதராக வாழ்பவர்களுக்கெல்லாம் வயிற்றுப் பிழைப்பைப்பற்றிய கவலையே அற்றிருக்கவேண்டும் என்பது உனதபிப்பிராயமா?

இராஜன்:- ஆமாம்! மிருகங்களுக்கும் மனிதர்களுக்கும் ஏதாகிலும் வித்தியாசம் இருக்கவேண்டும் என்றிருந்தால், இந்த முக்கியமான பிரச்சினையின் அடிப்படையில்தான் இருக்கவேண்டும்.

இராகவன்:- எப்படி?

இராஜன்:-மிருகங்கள் தம் வாழ்நாளை, உணவு தேடிப் புசிப்பதிலும், சிறிது உறங்குவதிலும், தத்தம் இன விருத்தி செய்வதிலுமே கழிக்கின்றன! மனித வர்க்கத்தையும் அதே நிலையில் வைத்திருப்பது கூடாது; அதனால், சிலர் சேரம்பேறிகளாய் வாழவும் பலர்

வறுமையினால் வாடவுந்தான் வழி பிறக்கும்!

இரஞ்சன்:- அப்படியானால், மனிதர்களுக்கு அவரவர்களுடைய உணவை, உடையை, ஓய்வை வேறு யாரேனும் தேடிக்கொடுத்துக்கொண்டிருக்கவேண்டும் என்கிறாயோ?

இராஜன்:- இல்லை! கோடானு கோடி மக்களுடைய உணவு, உடை, ஓய்வை ஒரு சில முதலாளித்துவக் கும்பல் தம்மிடமே குவித்து வைத்துக் கொள்ளவிடாமல், அரசியலார் அவைகளை ஒவ்வொருவருக்கும் சமமாகக் கிடைக்குமாறு பகிர்ந்து கொடுத்தாலே போதும்! மனிதன் உணவு, உடைக்கே காலமெல்லாம் உழைத்துத் தன் மூளையைப் பாழாக்கும் வாழ்க்கைப் போரை நிறுத்திவிட்டு அறிவு வளர்ச்சிக்கும், விஞ்ஞான முதிர்ச்சிக்கும் பாடுபட்டு மனிதத்தன்மையின் முக்கியத்துவத்தை அடையலாம்!!

இரஞ்சன்:- இராகவா! இவனுடைய ஏட்டுச்சுரைக்காய் நம்முடைய கறிக்குதவாது; நீ வா போகலாம்!

இராகவன்:- ஏன்! இவனுடைய ஏட்டுச் சுரைக்காய் இவனுக்கே உதவாதே! இவனேன் இதைக் கட்டி மாரடித்துக் கொண்டிருக்கிறான்!

இராஜன்:- காட்டுமிராண்டிகள் ஏட்டில் எழுதியகட்டுக்கதைகளை இன்றும் நாட்டில் வாழும் மூட நடைப்பிணங்கள் போற்றித்துதித்துச் சமுதாயச் சட்டதிட்டங்கள் என்று ஏற்று நடக்கும் போது, என் ஏட்டுச்சுரைக்காயா கறிக்குதவாது...? உம். போங்கள்! உதவுங் காலம் வரும் அப்போது உணர்வீர்கள்!!

[என்று கூறி விட்டுப் போய் விடுகிறான்.]

இராகவன்:- போயும் போயும்! அந்தப்பொதுவுடைமைப் பயித்தியம் பிடித்தவனோடு பேச்சுக் கொடுக்கிறாயே...?

இரஞ்சன்:- எல்லாம் காரிய மாத்தாண்டா பேசினேன்! உம். வா போகலாம்!

★

(2ம் பக்கத் தொடர்ச்சி)

சாரமாக எழுதி விட்டு இந்தப்போக்கு "சர்வ தேசியமா? சுத்த ஹம்பக்" என்று தேசியத்தின் திரைமறைவில் நடக்கும் இருட்டறைச் சம்பவங்களை "டார்ச்லைட்" அடித்துக்காட்டுகிறார். இந்தத் துணிந்த போக்கிற்கு நமது பாராட்டு!

* *

மேலேகண்ட எச்சரிக்கை, ஜஸ்டிஸ் கட்சியைப்பற்றிய உண்மை விளக்கம், அநீதி மிக்க போக்கிற்கு ஆணித்தரமான கண்டனம், இத்தியாதிகள் அனைத்தும் திராவிடர் கழக ஏடு தீட்டியதில்லை. தேசியத்தை ஆதரிக்கும் காண்டீபம் 3-12-48ல் "எது வகுப்புவாதம்" என்ற தலைப்பின்கீழ் தீட்டியிருப்பதுதான். நாட்டில் உலவிக்கொண்டிருக்கும் உண்மை வகுப்புவாதிகளை—பொதுஜனவிரோதிகளை—படம் பிடித்துக் காட்டுகிறார் காண்டீபத்தின் கர்த்தா. "எல்லோரும் ஓர் குலம்" என்று கருதுபவர்களைக்கூட இவர்கள்தான் ஆத்திரமூட்டி அனாவசியமான பிரச்சினைகளைக் கிளறிவிடுகிறார்கள்" என்று நாட்டில் குழப்பத்தைக் கிளறிவிடும் இவர்களைக் குற்றவாளிகளாக்கி கூண்டில்நிறுத்துகிறார். இந்த குற்றவாளிகளுக்கு தக்க தண்டனை அளிக்க வேண்டியது அரசாங்கத்தின் நீங்காத கடமை.

"வகுப்புவாரிப் பிரதிநிதித்துவத்தை ஒழித்துவிட வேண்டும் என்று கிளர்ச்சி செய்யும் பீமராவும், சூரிய நாராயணராவும் "ஹிந்துவும்" வரதாச்சாரி கம்பெனியும் விவேகானந்தா மடத்து அதிபதிகளும் என்ன சொல்லுகிறார்கள்?

"அதிகப் பள்ளிக்கூடங்கள் கட்டும்படி கேட்கவில்லை"

"இருக்கின்ற பள்ளிக்கூடங்களில் இருக்கும் வகுப்புவாரி முறையை ஒழிக்கச் சொல்லுகிறார்கள்"

"இதன்படி செய்தால் பார்ப்பனப் பிள்ளைகள் நீங்கலாக இதர பிள்ளைகள் தெருவில் நிற்க வேண்டும்"

"இப்படி நிற்கவைப்பதுதான் தேசியம் என்றாலோ, பரந்த மனப்பான்மை என்றாலோ, இந்த சர்வ தேசியமும் பரந்த மனப்பான்மையும் வேண்டவே வேண்டாமென்றுதானே கூறத் தோன்றும்" என்று ஆத்திரத்தோடு கேட்கிறார் காண்டீபத்தின் கர்த்தா. அவருக்கு ஏற்பட்டிருக்கும் ஆத்திரம் அந்த அளவோடு நின்றுவிடவில்லை. மீண்டும் விஷயத்தை விளக்குகிறார்.

"வகுப்புவாதம் ஒழியவேண்டும் என்று கதறும் இந்த வீரர்கள் விவேகானந்தா கல்லூரியில் காணப்படும் நிலைமையைக் கண்டு என் "அய்ஸ் வாட்டர்" சாப்பிட்ட மாதிரி இருக்கிறார்கள். அதே சமயத்தில் பிரதிநிதித்துவ முறைப்படி இடம் இல்லை என்று சொன்ன கல்லூரிகள் மீது, நக்கீரனைப் பார்த்த சிவபெருமானைப்

# குடி அரசு

## சிறு கதைப் போட்டி.

| | |
|---|---|
| 1. யார் குற்றவாளி? | |
| 2. விவேகமறிந்த வீரனின் மனைவி! | |
| 3. முழங்கால் பைத்தியம்! | |
| 4. பிரிந்தது குற்றமா? | |
| 5. லட்சிய வாதி! | |
| 6. "சவக்குழி" | |
| 7. விதவையின் கடிதம்! | |
| 8. பதிவாளன் பாலன்! | |
| 9 கதை கண்ட கற்கள்" | |
| 10. "தாசி" | |
| 11. கோலைக் குற்றவாளி! | |
| 12. "அவளும்—நானும்" | |
| 13. சந்நியாசி! | |

× அடையாளமிட்டவரின் சிறு கதையைப் பரிசுக்குரியதென நான் தேர்ந்தெடுக்கிறேன்.

பெயர்..........................................

தெரு.........

..............1948. ஊர்.......

போல் பார்க்கிறார்கள். இந்த ஒரு வஞ்சகத்திற்கு என்ன என்று சொல்வது? என்று நம்மைக் கேட்டுவிட்டு இது "சண்டித்தனமா? அல்லது சல்லித்தனமா"? என்றும் கேட்கிறார். இவர்கள் செய்வது சண்டித்தனமும் சல்லித்தனமும் சேர்ந்த அயோக்கியத்தனம் மட்டுமல்ல; சுத்தத் திருட்டுத்தனமும் கூடத்தான் என்று சொல்வேன். காண்டீபம் உவமை காட்டியிருப்பது போல குற்றத்தைக் குற்றம் என்று கூறிய நக்கீரனைப் பார்த்து சிவபெருமான் சீறியதுபோல்—கதைக்காகத்தான் சொல்கிறேன்—உள்ளதை உள்ளபடி எடுத்துக் காட்டியிருக்கும் காண்டீபத்தின் மீது சிவபெருமானின் பரம்பரையினர் என்று கூறிக்கொள்ளும் பார்ப்பனர்கள் பாய்ந்தாலும் பாய்வார்கள். ஆரியம் மாண்டு மடியும் வரை காண்டீபம் அஞ்சாமல் அதன் மீது குறிவைத்துக் கணைவிடவேண்டும் என்பதுதான் என் ஆசை!

காண்டீபத்தின் இந்தப் போக்கு நமக்கு ஆச்சரியமானதல்ல. ஆனால் தேசியம் பேசும் தோழர்கள் காலம் மாறிவிட்டது. அதற்கேற்ப கருத்தையும் மாற்றிக்கொள்ள வேண்டும் என்ற உண்மையை இனியாவது உணர்வார்களாக. வகுப்புவாரிப்பிரதிநிதித்துவ முறை ஒழிக்கப்படுமானால் நமது பிள்ளைகளின் கதி என்னவாகும் என்பதைக் காண்டீபத்தின் முடிவுப்படி பார்த்தால் தெருவில் நிற்கும்படி ஏற்பட்டுவிடும். இதுபோன்ற நிலை ஏற்பட்டுவிடும் என்பதை உணர்ந்துதான் தேசியத்தைப் பல ஆண்டுகளுக்கு முன்னரே நாம் எதிர்த்தோம்!—இன்றும் எதிர்த்தும் வருகிறோம்!—நாளை எதிர்த்து ஒழித்தே தீருவோம்! 'சர்வ தேசியம் என்பது சுத்த ஹம்பக் என்று காண்டீபம் எழுதுவதைப் பார்க்கும் பொழுது நமது கொள்கை வளர்கிறது என்று தெரிகிறது. அது வருங்காலத்தில் வெற்றிபெறும் என்ற நம்பிக்கையையும் ஊட்டுகிறது.

தேசியம் என்பது ஆரியத்தைப் பாதுகாப்பதற்காக ஏற்படுத்தப்பட்டிருக்கும் கோட்டை கொத்தளங்கள். அதை இடித்துத் தகர்த்தெறியாத வரை திராவிட மக்களின் வாழ்வை வளமுள்ளதாக மாற்றியமைக்க முடியாது. இதைக் காண்டீபம் இனியாவது உணரட்டும். உண்மை வகுப்புவாதிகள் யார் என்பதை நாடு உணரத் தொடங்கிவிட்டது. வகுப்புவாரிப் பிரதிநிதித்துவத்தை எதிர்க்கும் ஒவ்வொருவரும் வகுப்புவாதிகள் என்பது நம்முடையதும் காண்டீபத்தினுடையதுமான ஏகோபித்த முடிவு.

"குள்ள மனப்பான்மையும் சுயநலமும் கொண்டவர்கள்தான் இதை (வகுப்புவாரி பிரதிநிதித்துவத்தை) எதிர்க்கிறார்கள். "ஹிந்து" போன்ற பிற்போக்கு வியாபாரப் பத்திரிகைகள் இதற்கு ஜாலராகொட்டுகின்றன" என்று எழுதுகின்றது காண்டீபம். இந்தக் குள்ள மனப்பான்மை கொண்டவர்களையும், அவர்களுக்கு ஒத்தூதும் ஹிந்து போன்ற பத்திரிகைகளையும் விட்டு வைத்தால் நாட்டில் குழப்பம் விளையும் என்பதை அரசாங்கத்திற்கு எச்சரிக்கிறேன்.

வகுப்பு வாதம் ஒழிந்தால்தான் நாட்டில் அமைதியைக்காண முடியும், மக்களின் வாழ்வில் இன்பம் நிலவ இயலும் என்பதை வலியுறுத்துகிறேன். வகுப்புவாதத்தை ஒழித்து நாட்டில் அமைதியை நிலைநாட்ட வேண்டும் என்றஆசை அரசாங்கத்திற்கு இருக்குமானால் உண்மை வகுப்புவாதிகளான பீமராவையும், சூரிய நாராயணராவையும், வரதாச்சாரி கம்பெனியையும் உடனே கைது செய்து தூக்கிலேற்ற வேண்டும். அல்லது நீண்ட நாள் ஆயுள் தண்டனை கொடுத்து அந்தமான் போன்ற இடத்திற்கு அனுப்ப வேண்டும். அதாவது பாடுபட்டுழைக்கும் தொழிலாளியாக மாற்றியமைக்க வேண்டும். நாட்டில் வகுப்புவாதத்தையும், கலவரத்தையும் விளைவிப்பதற்கு தாளம் போடும் ஹிந்து போன்ற பத்திரிகைகளையும், காண்டீபம் கூற மறந்துவிட்ட சுதேசமித்திரன், தினமணி, பாரததேவி முதலிய பத்திரிகைகளுக்கும் உடனே தடைவிதிக்கவேண்டும். இப்படிச் செய்தால் தவிர இனி நாட்டில் அமைதியைக்காண முடியாது. இதைச் செய்ய யோக்கியதையற்ற அரசாங்கம் வகுப்புவாதத்தை ஒழிப்பதாகப் பீத்திக்கொள்வதில் பயனில்லை. இதைக் காண்டீபம் ஆளவந்தார்களுக்கு உணர்த்தட்டும்.

# வேண்டுகோள்!

தோழியர்களே! தோழர்களே!

இந்த இதழில் வெளிவந்திருக்கும் சிறுகதையோடு, 2-ம் பருவத்திற்குரிய 13 கதைகளும் வெளிவந்து விட்டன. இவற்றுள் எந்த எண்ணில் (நம்பரில்) வந்த சிறுகதை பரிசுக்குரியது என்பதைத் தேர்ந்தெடுக்கக் கடமைப்பட்ட வாசக வாக்காளர்களாகிய நீங்கள், உங்கள் மனதுக்கு விருப்பமான ஒரு கதையை தேர்ந்தெடுத்தனுப்பும்படி வேண்டிக்கொள்கிறோம்.

இப்போட்டியில் கலந்து கொண்டிருக்கும் 13 எண்களையும் 13 தலைப்புகளையும் சேர்த்து இதன் மறுபுறத்தில் வாக்குரிமைச் சீட்டாக அமைக்கப்பட்டிருக்கிறது. எந்த எண்ணுக்குப் பரிசு கொடுக்கலாமென்று நினைக்கிறீர்களோ அந்த எண்ணுக்கு முன்னால் X அடையாளம் போட்டு, கீழே கையெழுத்தோடு முகவரியும் குறிப்பிட்டு, கத்திரித்துக் கீழ்க்கண்ட முகவரிக்கு அனுப்பிவையுங்கள்.

ஒவ்வொரு ஊரிலுள்ளவர்கள் ஒன்றாகக் கூடியோ அல்லது அந்தந்த ஊர் குடி அரசு ஏஜண்டிடம் கொடுத்தோ, மொத்தமாகச் சேர்த்தும் வாக்குச் சீட்டுகளை அனுப்பலாம்.

தனித்தனியாக அனுப்புவோர் முக்காலணாச் செலவில் புக்போஸ்டிலும் அனுப்பலாம்.

வாக்குரிமைச் சீட்டு, வந்து சேரவேண்டிய கடைசி நாள் 26—12—48.

முதற் பருவத்தில், நீங்கள் ஒத்துழைத்ததைக் காட்டிலும், இந்த இரண்டாம் பருவத்தில் மிகுதியாக ஒத்துழைப்பீர்கள் என்கிற நம்பிக்கையுடன், எங்களின் இந்த முயற்சி மேலும் மேலும் வளர, சிரத்தையோடு கலந்து தீர்ப்புக் கூறியருளவேண்டுமெனப் பணிவோடு கேட்டுக்கொள்கிறோம்.

ஆசிரியர், "குடி அரசு", ஈரோடு.


கவிஞர் பாரதிதாசன்.

| | | | |
|---|---|---|---|
| பாரதிதாசன் கவிதைகள் | 3 | 8 | 0 |
| பாண்டியன் பரிசு | 3 | 8 | 0 |
| எதிர்பாராத முத்தம் | 1 | 4 | 0 |
| அழகின் சிரிப்பு | 1 | 0 | 0 |
| தமிழ் இயக்கம் | 1 | 0 | 0 |
| காதல் நினைவுகள் | 0 | 12 | 0 |
| இசையமுது | 0 | 12 | 0 |
| முல்லைக்காடு | 0 | 12 | 0 |
| நல்லதீர்ப்பு | 0 | 10 | 0 |
| கவிஞர் பேசுகிறார் | 0 | 10 | 0 |
| குடும்பவிளக்கு I | 0 | 10 | 0 |
| ,, II | 0 | 6 | 0 |
| அமைதி | 0 | 8 | 0 |

நாதன் கம்பெனி லிமிடெட்
கச்சேரி வீதி, ஈரோடு.


Edited, Printed and Published by N. Kariyaradaswamy at the Tamilian Press Old No. 42, New No. 59, Cutcherystreet, ERODE